REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்
2023 ஜனவரி 7 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 06 | Saturday 07, January, 2023 | 12 பக்கங்கள்

## தேசிய பொங்கல் விழா இம்முறை யாழ்ப்பாணத்தில்

### திங்களன்று விசேட கூட்டம்



யாழ்.விசேட நிருபர்

தேசிய தைப்பொங்கல் விழா இம்முறை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொண்டாடப் படவுள்ளது.

தேசிய பொங்கல் நிகழ்வு 02

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒரே கருத்தை எட்ட வேண்டும்

### தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி தெரிவிப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் நான்கு விதமான கருத்துக்களை முன்வைப்பதற்குப் பதிலாக ஒரே கருத்தை எட்ட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் நான்கு உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியை சந்தித்துள்ளனர்.

இந்த சுயாதீன ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வித தடையும் இல்லையென ஜனாதிபதி தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார். தேர்தலை நடத்துவது தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வருமாறு ஜனாதிபதி அவர்களுக்கு அறிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பான ஏதேனும் சட்டப்பூர்வ விஷயங்களைத் தேவை ஏற்படும் போதெல்லாம், சட்ட மாஅதிபரின் ஆலோசனைகளைப் பெறுமாறு அவர்களுக்குத் தெரிவித்ததோடு, அதற்குத் தேவையான ஆதரவை 02

பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில்

## கோதுமை மாவுக்கு பதிலாக அரிசி மா உணவுகள்



### செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த குழு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் இனிப்பு குளிர்பானங்கள் மற்றும் கோதுமை மாவில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை தடை செய்து அரிசிமாவினால் தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்கள் மற்றும் இயற்கையான பழ பானங்களை விற்பனை செய்வதை ஊக்குவிக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பான வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் முக்கிய உணவு கட்டுப்பாட்டாளராக செயற்படும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் கருத்துக்களை பெற்றுக்கொண்ட பின்னர் அவரது வழிகாட்டல்களுடன் மேற்படி குழுவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அக்குழுவில் சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு, 02

காணி விடுவிப்பு, தமிழ் கைதிகளின் விடுதலை

## நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முயற்சிகளாக இருக்க வேண்டும்



### தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கான வழித்தடம் குறித்து அமைச்சர் டக்ளஸ் மீண்டும் வலியுறுத்து

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் முதல் கட்டமாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தின் மூலமும், நிர்வாக ஏற்பாடுகளுக்கூடாகவும் காலத்துக்கு காலம் இல்லாமல் செய்யப்பட்ட அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு மீளக் கையளிக்க வேண்டுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

காணி விடுவிப்பு மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவை நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கான முயற்சிகளாக இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அரசியல் அபிலாசைகளுக்கு 02

# உலகின் பல செல்வந்தர்களின் கிரெடிட் கார்ட் ஊடாக மோசடி

### 50 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் மோசடி செய்த 18 வயது இளைஞர் கைது



### அவருடன் தொடர்புடையவர்களையும் கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

செல்வந்த நாடுகளின் வசதி படைத்த நபர்களின் கிரெடிட் கார்ட் தரவுகளை இணைய தளம் மூலம் கண்டு பிடித்து ஒன்லைன் மூலமாக 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக பொருட்களை கொள்வனவு செய்துள்ள 18 வயது இளைஞர் ஒருவரை குற்றத்தடுப்பு விசாரணை கணனி பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அமெரிக்கா, ஆர்ஜென்டினா, மெக்ஸிக்கோ, ஐக்கிய இராஜ்ஜியம் உள்ளிட்ட பல செல்வந்த நாடுகளிலுள்ள வசதி படைத்த நபர்களின் கிரெடிட் கார்ட் தரவுகளை இணையதளம் மூலம் இனம் கண்டு 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையில் கடந்த 2021 டிசம்பர் மாதம் முதல் இந்த இளைஞர் ஒன்லைன் மூலமாக பொருட்களை கொள்வனவு செய்துள்ளமை விசாரணைகளிலிருந்து 02

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட

## 1,215 மெ.தொன் சீனி சுங்கத்திடம் சிக்கியது

### வெள்ளைச் சீனியென சிகப்பு சீனி இறக்குமதி செய்தமை அம்பலம்



படங்கள் : சுதத் நிஷாந்த



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சிவப்பு சீனி ஒரு தொகையை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். 02

உள்ளூராட்சி சபைத் தேர்தல்:


## CWC சேவல் சின்னத்தில் போட்டியிட முடிவு

03



ஹங்வெல்ல கொலைச் சம்பவம்

## தேடப்பட்டுவந்த "கரவிட்ட சியா" பொலிஸாரினால் சுட்டுக்கொலை



கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த "கரவிட்ட சியா" என்ற சந்தேகநபர் பொலிஸாருடனான துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

"கரவிட்ட சியா" என்ற புனை பெயர் கொண்ட நபர் கடந்த டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி ஹங்வெல்ல பகுதியிலுள்ள கடையொன்றின் உரிமையாளரைக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் என மேல்மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை 02

இந்தியா, தாய், சீனாவுடன் விரைவில்

## இலங்கை வர்த்தக பேச்சுவார்த்தை தாய்லாந்து அதிகாரிகள் திங்களன்று வருகை




இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்துடன் இலங்கை வர்த்தக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்காக உலக நாடுகளுடன் பொருளாதார உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ள இலங்கை, இந்த மூன்று நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளது.

2018 இல் இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்காக தாய்லாந்து அதிகாரிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளதாக சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் குறித்து இலங்கையின் சார்பில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் பிரதான அதிகாரி 02

போதைப்பொருள் பணம் கொடுக்கல் வாங்கல்

## நீர்கொழும்பில் கடத்தப்பட்ட குழந்தை கொழும்பில் மீட்பு

### STF அதிரடி, பெண்ணொருவரும் கைது




நீர்கொழும்பில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவும் பணத்தை செலுத்துமாறு வற்புறுத்தியும் குழந்தையொன்று கடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது குழந்தை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடத்தப்பட்ட குழந்தை, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட "ரந்திய உயன" 02

## லாஃப் சமையல் எரிவாயு விலைகளும் குறைப்பு

### 12.5 kg புதிய விலை ரூ.5080

**லோரன்ஸ் செல்வநாயகம்**



லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலைகளும் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க 12.5 கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 220 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக லாப் கேஸ் 02



## 60,000 மெ.தொன் நிலக்கரியுடன் கப்பல் நாட்டை வந்தடைவு

மேலும் சில கப்பல்கள் அடுத்தடுத்த வாரங்களில் 03



ஸ்ரீதலதா மாளிகையை அவமதிப்பு:

## சேபால அமரசிங்கவுக்கு ஜன.10 வரை விளக்கமறியல்

மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று உத்தரவு 03

## TNA இம்முறை தேர்தலில் வீடு சின்னத்தில் போட்டி

இன்று மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் 03



இந்திய வெளிவிவகார அமைச்சர்

## ஜெய்சங்கர் இம்மாதம் இலங்கை விஜயம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் முக்கிய இருதரப்பு பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக இம்மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் அவர் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்வது இதுவே முதல் தடவையாகும் என்பதுடன் அவரது இலங்கை விஜயத்திற்கான திகதி இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் மிக நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியா பல்வேறு உதவி 02

பாரிய பொருளாதார நெருக்கடிக்குள்

## தேர்தல் நடத்தப்பட்டால் அது உலக சாதனையாகும்

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இச் சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் அது உலக சாதனையாக கருதப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த தருணத்தில் தேர்தல் நடத்துவதானால் பணம் அச்சடிக்க வேண்டி நேருமென்றும் 02

தமிழ்நாடு வேதாளை கடற்கரையில்

## இலங்கைக்கு கடத்தவிருந்த 06 இலட்சம் வலி நிவாரண மாத்திரைகள் பறிமுதல்

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இராமேஸ்வரம் மண்டபத்தை அடுத்த வேதாளை கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 06 இலட்சம் மாத்திரைகள், மருந்துப் பொருள்களை இந்திய கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே வேதாளை கடற்கரையிலிருந்து இலங்கைக்கு சில பொருட்கள் கடத்தப்பட உள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் வந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸார் வேதாளை தெற்கு கடற்கரை பகுதிக்கு விரைந்து சென்று பல இடங்களில் சோதனையிட்டனர். அங்கு சந்தேகப்படும்படியாக நின்றிருந்த நாட்டு படகில் 02

உள்ளூராட்சி மன்ற தேர்தல் 2023

# களுத்துறை மாவட்டத்தில் SLPP கட்டுப்பணம் செலுத்தியது

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன களுத்துறை மாவட்டத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்த நேற்றுமுன்தினம் முதல் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி. பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை மாநகர சபைக்காக சுயேட்சைக்குழு ஒன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி சகல பிரதேச சபைகளும், மாநகர சபைகளும் உள்ளடங்கும் வகையில் கட்டுப்பணம் செலுத்தவுள்ளதாக அதன் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சீ அலவத்துவல தெரிவித்துள்ளார். எதிர்வரும் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்ச்சை குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியது.

(The sentence beginning "ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 18ஆம் திகதி நாட்டின்" is printed as: ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 18ஆம் திகதி நாட்டின்)

# கர்நாடகாவில் 38 இலங்கையர் உண்ணாவிரதப் போராட்டம்

கர்நாடகாவில் இலங்கை அகதிகள் 38 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். கனடா செல்வதற்காக முகவர்களால் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 38 பேர் நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் 2021–06–10 ஆம் திகதி கர்நாடகாவின் மங்களூரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர்களை விடுதலை செய்த நீதிமன்றம் அவர்களை தனது நாட்டுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தது. அதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்காக 15 நாட்கள் அவகாசம் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட போதிலும் தம்மை அனுப்பிவைப்பதற்கான ஏற்பாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தே அகதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். யாரிடம் தொடர்புகொள்வது என்பது தெரியாதென்று பரிதவிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## சேபால அமரசிங்கவுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

நல்லிணக்கத்துக்கும் பௌத்த மதத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்திவருவது தொடர்பில் பாராளுமன்றத்திலும் வெளியிலும் கடந்த சில தினங்களாக பல்வேறு தரப்புக்களாலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதுடன் அவரைக் கைதுசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அந்தத் தரப்புகள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தன.

அந்தவகையில், பொரலஸ்கமுவ பகுதியிலுள்ள அவரது வீட்டில்வைத்து குற்றத்தடுப்பு விசாரணை அதிகாரிகள் அவரை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபரின் செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் கவனம் செலுத்தியுள்ளதுடன் அவரது பணிப்புரையின் பேரிலேயே குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகள், அவரிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறான செயற்பாடுகளை தடுப்பது தொடர்பில் நடைமுறையிலுள்ள மதங்களுக்கு எதிரான 1958 ஆம் இலக்க 41வது சரத்திற்கிணங்க அது தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் அதன் அடிப்படையில் மேற்படி நபரின் செயற்பாடுகளும் தண்டனைக்குரிய குற்றம் என்ற வகையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## CWC சேவல்... (03ஆம் பக்கத் தொடர்)

நடத்தியுள்ளனர். அதன்போது, தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இ.தொ.காங்கிரஸானது நீண்ட காலம் சேவல் சின்னத்தில் தேர்தல்களில் போட்டியிடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் சேவல் சின்னத்தில் போட்டியிடாததால் தமது கட்சியின் முன்னேற்றத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் ஆராய்ந்த பின்னரே இந்த முடிவு எட்டப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். சேவல் சின்னத்தில் இ.தொ.கா. போட்டியிடுவதால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் ஏனைய பிரதான கட்சிகளுக்கு கிடைக்கும் வாக்குகளின் விகிதம் குறைவடையும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மேல் மாகாணத்தில்... (03ஆம் பக்கத் தொடர்)

மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணி முதல் 3 மணி வரை மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் போதைப் பொருள் மற்றும் போதை மாத்திரைகள் விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே மேற்படி 55 பேரையும் கைதுசெய்துள்ளதாக அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 9 கிராம் மற்றும் 980 மி.கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் 16 கிராம் மற்றும் 420 மி.கிராம் ஹெரோயின் போதைப்பொருள் 2 கிலோ மற்றும் 833 மி.கிராம் கஞ்சா மற்றும் 20 போதை மாத்திரைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது. பாடசாலைகளை இலக்காகக் கொண்ட போதைப்பொருள் தடுப்பு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அந்த அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## உத்தேச தேசிய இளைஞர்... (03ஆம் பக்கத் தொடர்)

கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு/ நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்/ நீர், காற்று, நிலம் மற்றும் விலங்கு பாதுகாப்பு/ நிர்வாகத்திற்கான தொழில்நுட்பம், வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் ஒழிப்பு/ தேசிய அபிவிருத்திக்கான செயற்கை நுண்ணறிவு மற்றும் இயக்கவியல் கற்றல்/ நியாயமான சமூகம் ஆகிய துறைகள் தொடர்பில் தேசிய இளைஞர் தளத்தின் கவனம் செலுத்தப்படும்.

உறுப்பினர், இளைஞர் அமைப்பு மற்றும் ஆலோசகர் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் தேசிய இளைஞர் தளத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உறுப்பினராக விண்ணப்பிப்பதற்கான வயது எல்லை 16 – 35 ஆகும். இளைஞர் அமைப்புக்கு 40 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆலோசகர் பதவிக்கு வயதெல்லை கிடையாது.

தேசிய இளைஞர் தளத்தில் உறுப்பினராவதற்கு எதிர்பார்ப்பவர்கள் தாம் நீண்டகாலம் மேற்கொண்டு வந்த திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேசிய இளைஞர் தளம் கவனம் செலுத்தும் பகுதிகளில் நிபுணத்துவம் பெற்ற நபர்களுக்கு விண்ணப்பிக்கவும் அல்லது இத்திட்டத்தில் ஆலோசகர்களாக நியமிக்கப்பட முடியும். நேர்முகப்பரீட்சை செயன்முறைக்குப் பின்னர் தெரிவுகள் இடம்பெறும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் தாங்கள் பணிபுரிய விரும்பும் ஒரு துறையை மட்டும் தேர்ந்தெடுத்து, 31 ஜனவரி 2023 அன்று அல்லது அதற்கு முன்பாக தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை dir.ysd@presidentsoffice.lk அல்லது "பணிப்பாளர், இளைஞர் மற்றும் நிலைபேரான அபிவிருத்தி, ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

நிர்வாகம், உள்ளடக்க உருவாக்கம், தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல்,விநியோகம் மற்றும் நிதி ஆகிய துறைகளில் தமது சேவைகளை தொண்டர் அடிப்படையில் வழங்க ஆர்வமுள்ள எவரும் ஜனாதிபதி செயலகத்தில் உள்ள இளைஞர் மற்றும் நிலையான அபிவிருத்தி பணிப்பாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

## ஒருசிலரின் நலன்களை... (03ஆம் பக்கத் தொடர்)

அதற்கு பதிலளித்த அமைச்சர், ஆசிரியர் சேவை யாப்பில் 35 வயதுக்குக் குறைவானவர்களை அதற்காக நியமிப்பதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விடயங்களை தெளிவுபடுத்தக்கூடிய ஆற்றல், அதிக ஞாபக சக்தி கொண்ட இளம் வயது ஆசிரியர்களே கற்பித்தலுக்கு சிறந்தவர்கள் என்பதால்தான் அவ்வாறு யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தவகையில் கல்வியியற் கல்லூரிகளிலிருந்து பயிற்சிபெற்று வெளியேறுபவர்களே சிறந்த ஆசிரியர்கள்.

19 வயதில் உயர்தர பரீட்சையில் சித்திபெற்று 23 வயதாகும்போது டிப்ளோமாவைப் பெற்றுக்கொண்டு ஆசிரியர்களாக வகுப்புகளுக்கு சிலர் செல்கின்றனர். அவர்கள் எந்த இடத்திலும் சேவைசெய்வதற்கு விருப்பமுடையவர்கள்.

வகுப்புகளில் சிறந்த கல்வியை வழங்காததன் காரணத்தினாலேயே பிள்ளைகள் பெருமளவில் தற்போது ரியூசன் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, சிலரது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு வயதானவர்களை ஆசிரியர்களாக நியமிக்கவேண்டுமானால் 55 வயது வரை ஆசிரியர்களை நியமிக்கலாமே! அது சிறந்ததா என்றும் அமைச்சர் கேள்வியெழுப்பினார்.

## 60,000 மெ.தொன்... (03ஆம் பக்கத் தொடர்)

அதே வேளை, நாட்டிற்கு தேவையான 720,000 மெட்ரிக் தொன் நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு இந்தோனேசிய நிறுவனமான எரிஸ்டம் மிட்ரா நிறுவனத்திடம் டெண்டர் கோரியுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க அந்த நிறுவனத்திடம் இருந்து 12 கப்பல்களில் நிலக்கரி கிடைக்கவுள்ளதாகவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் அது நாட்டிற்கு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நிலக்கரியை வழங்குவதற்காக 9 நிறுவனங்களிடமிருந்து விலைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு கடன் மீள செலுத்துவதற்கான காலம் தொடர்பான அவகாசத்தை வழங்குவதில் பொருத்தமான நிறுவனமாக மேற்படி நிறுவனம் உள்ளதாகவும் அந்த நிறுவனம் குறைந்த விலையில் நிலக்கரியை வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் கிரிக்கெட்... (03ஆம் பக்கத் தொடர்)

போன்றோரும் இவரது பயிற்சியின் மூலம் தேசிய மட்டத்துக்கு வந்துள்ளனர். லேக்ஹவுஸ் நிறுவனத்திலும் பணியாற்றிய பிரேமதாச, தனது கிரிக்கெட் பயிற்சியாளர் வாழ்க்கையின் 50ஆவது ஆண்டு நிறைவையும், 80ஆவது பிறந்தநாளையும் முன்னிட்டு ஸ்ரீ சுமங்கல விதுஹலேயின் பழைய மாணவர் சங்கத்தினால் விசேட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பிரேமதாசவின் இறுதிக் கிரியை நாளை (8) பாணந்துறையில் நடைபெறவுள்ளது.

## தேர்தல் ஆணைக்குழுவே... (03ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்தார். முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தமது கேள்வியின் போது, உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உள்ளூராட்சி சபைகள் எதுவும் இதுவரை கலைக்கப்படவில்லை. உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி முடிவடையும் காலம் மார்ச் மாதம் 18ஆம் திகதியாகும். அவ்வாறாயின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சிலர் சபை உறுப்பினர்களாகவே போட்டியிடும் நிலை ஏற்படுகின்றது. இது அநீதியாகும். அத்துடன் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படாமல் அந்த சபைகளுக்கு தேர்தலை நடத்த வேட்புமனு கோருவது இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் இடம்பெற்றதில்லை. அதனை கவனத்திற் கொண்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரான பிரதமருக்கு அதிகாரம் உள்ளது. அவரது நிலைப்பாடு என்ன என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் ஆணைக்குழு தமக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்துக்கு அமைய உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்வதற்கு திகதியைக் குறிப்பிட்டு வர்த்தமானியும் வெளியிட்டுள்ளது.

அதன் பிரகாரம் நேற்று முதல் அதற்காக கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனையடுத்து வேட்புமனு தாக்கல் செய்யப்படும். இத்தகைய நடைமுறைக்கு அமைய உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக் காலம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவே தீர்மானிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள வர்த்தமானி அறிவிப்பின் படி அனைத்து உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக்காலம் மார்ச் மாதம் 18ஆம் திகதியே முடிவடைகின்றது. அதனால் தேர்தல் ஆணைக்குழுவே அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுதொடர்பில் எவரும் சந்தேகம் கொள்ள தேவையில்லை.

இத்தகைய நிலையில் களுத்துறை தொகுதிக்கு பொதுஜன பெரமுன கட்சி நேற்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. அதனை பின்பற்றி அனைவரும் செயல்பட முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேடப்பட்டுவந்த "கரவிட்ட சியா"...

மேற்கொண்ட பொலிஸார், கடை உரிமையாளரின் கொலைக்கு உதவிய குற்றச்சாட்டின் கீழ் மேலும் இரு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

அதன்படி இச்சந்தேகநபர் ஹங்வெல்ல நிரிபொல பிரதேசத்தில் தங்கியிருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய சந்தேக நபரை தேடும் நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்தனர்.

தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகநபர் பொலிஸாரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதுடன், பதில் துப்பாக்கிச் சூட்டில் சந்தேக நபர் பலத்த காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டு தாக்குதலில் பலத்த காயமடைந்த சந்தேக நபர் அவிஸ்ஸாவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## இலங்கை வர்த்தக பேச்சுவார்த்தை...

கே.ஜே வீரசிங்க தெரிவித்துள்ளார். இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளிகளான இந்தியா மற்றும் சீனாவுடனான பேச்சுவார்த்தைகள் பெப்ரவரி, மார்ச்சில் ஆரம்பமாகுமென அவர் தெரிவித்துள்ளார். பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பது முதலீட்டை கவர்வது குறித்தே கவனம் செலுத்தப்படுவதாக தெரிவித்துள்ள அவர், இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இது அவசியமெனவும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட்19 தொற்று காரணமாக இந்தப் பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்பட்டன. நாங்கள் பேச்சுவார்த்தைகளுக்காக சென்றுகொண்டிருக்கின்றோம் என தாய்லாந்து அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

## நீர்கொழும்பில் கடத்தப்பட்ட...

அடுக்குமாடி குடியிருப்பில் விசேட அதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக கிராண்ட்பாஸ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் வீட்டிலிருந்த பெண் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

"ரந்திய உயன" அடுக்குமாடி குடியிருப்பைச் சேர்ந்த பெண் ஒருவரே நீர்கொழும்பு பகுதியிலுள்ள நபரொருவருக்கு போதைப்பொருள் விற்பனை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. உரிய பணத்தை செலுத்தாததால் அவரது குழந்தை கடத்தப்பட்டதாக விசாரணையில் இருந்து தெரியவந்தது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜெய்சங்கர் இம்மாதம்...

ஒத்துழைப்புகளை தொடர்ந்து வழங்கி வந்துள்ளதுடன் எரிபொருள், உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் கொள்வனவிற்கும் நிதி உதவிகளை வழங்கியுள்ளது.

பல்வேறு அம்சங்களில் ஏற்கனவே நான்கு பில்லியன் அமெரிக்கன் டொலர்களை இந்தியா கடன் உதவியாக இலங்கைக்கு வழங்கியுள்ளதுடன் இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்த விஜயம் நாட்டின் முக்கிய பல்வேறு நடவடிக்கைகளுக்கு உந்து சக்தியாக அமையும் என்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த வருடம் மார்ச் மாதம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டதுடன் இந்த புதிய வருடத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதல் வெளிநாட்டு அமைச்சராக அவரின் விஜயம் அமையவுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இலங்கைக்கு கடத்தவிருந்த 06 இலட்சம்...

சோதனை செய்தபோது, அந்த படகுக்குள் 10 பெட்டிகள் இருந்தன. பிளாஸ்டிக் சாக்குகளை தைத்து, அதனுள் அந்த பெட்டிகளை வைத்திருந்தனர். பெட்டிகளில் வலி நிவாரணி மாத்திரைகள் இருந்தது தெரியவந்தது. இந்த மாத்திரைகள் போதைக்காகவும் பயன்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது. மொத்தம் 06 இலட்சம் மாத்திரைகள் இருந்தன. புதிய செல்போன் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றை கைப்பற்றிய கியூ பிரிவு பொலிஸார், மண்டபம் பொலிஸில் ஒப்படைத்தனர். மாத்திரைகளின் இந்திய ரூபாவில் சுமார் ஒரு கோடியே 20 இலட்ச ரூபாய் இருக்கும் என்று தெரியவருகிறது. படகிலுள்ள பதிவு எண்ணை வைத்து அந்த படகு யாருக்கு சொந்தமானது, அதில் மாத்திரைகளை ஏற்றி இலங்கைக்கு கடத்த முயன்றது யார் என்பது குறித்து பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். தொடர்ந்து, வேதாளை கடற்கரைப் பகுதியிலிருந்து கடத்தல் சம்பவம் அதிகரித்து வருவதால், அந்தப் பகுதியை முழுமையாகக் கண்காணிக்கும் வகையில் பாதுகாப்பு நிலையம் அமைக்க பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

## கோதுமை மாவுக்கு பதிலாக...

கல்வியமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள், மவ்பிம லங்கா பதனம அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளடங்குவர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மவ்பிம லங்கா பதனம அமைப்பின் பிரதிநிதிகளான ஆரிய சீலி விக்ரமநாயக்க, டாக்டர் கே.எம். வசந்த பண்டார மற்றும் சுமித் வன்னியாரச்சி ஆகியோர் விவசாய அமைச்சரை சந்தித்து மேற்படி வேலைத்திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். குறிப்பாக பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் மட்டுமன்றி அரச நிறுவனங்களில் சிற்றுண்டிச்சாலைகளில் கோதுமை உற்பத்திப் பொருட்கள், இனிப்புப் பான வகைகள் ஆகியவற்றை தடை செய்து அரிசி மா உற்பத்தி உணவுப் பொருட்கள் மற்றும் இயற்கையான பழ வகையில் தயாரிக்கப்படும் பானங்களை விற்பனை செய்வதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## தேர்தல் நடத்தப்பட்டால்...

அவ்வாறு பணம் அச்சடித்து தேர்தல் நடத்தப்பட்டால் அது இலங்கையின் உலக சாதனையாகவே அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் நடத்தப்படுமா, இல்லையா என்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் அவரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் 2,500 மில்லியன் ரூபா பணம் அச்சடித்து அரசாங்கத்தின் செலவுகள் நிவர்த்தி செய்யப்பட்டமை இரகசியமானதல்ல என்பதை குறிப்பிட்ட அவர், பணம் அச்சடிக்கப்பட்டதால் பணவீக்கம் அதிகரிப்பதற்கு அது சந்தர்ப்பமாக அமையாமைக்கு காரணம் அதனை அன்றாட செலவுகளுக்காக பெற்றுக்கொள்ளாமல் நிதி முகாமைத்துவம் செய்யப்பட்டதாலேயே என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## தேசிய பொங்கல் விழா ...

தொடர்பான முன்னேற்பாட்டு கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை, ஜனாதிபதி செயலக அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளின் பங்குபற்றுதலோடு நடைபெறவுள்ளது.

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்...

சட்ட மாஅதிபர் வழங்குவார் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். தேர்தல் தொடர்பான எந்தவொரு சட்ட விடயம் குறித்தும் அவரிடம் நேரடியாக விசாரிக்குமாறு சட்ட மாஅதிபர் அவர்களுக்கு அறிவித்தியுள்ளார். எனினும், தேர்தல் குறித்து ஆணைக்குழு உறுப்பினர்கள் நான்கு விதமான கருத்துக்களை முன்வைத்ததன் காரணமாக இறுதி முடிவு எடுக்கப்படாமலேயே கூட்டம் நிறைவடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும்...

தீர்வு காணும் வகையில் ஜனாதிபதிக்கும் தமிழ் தரப்புக்களுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாக (05)நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் டக்ளஸ் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் விவகாரங்களை தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவின் பிரதிநிதி மற்றும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர் என்ற வகையில், ஜனாதிபதியின் கலந்துரையாடல்களில் இரட்டை வகிபாகத்தை கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதிலிருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஈடேற்ற முடியுமென்று சுமார் 35 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது

## 1,215 மெ.தொன் சீனி...

அரசாங்கம் சிவப்புச் சீனியை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்துள்ள பின்னணியில் வெள்ளைச் சீனி என்ற போர்வையில் இந்த சிவப்புச் சீனி நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு 1,215 தொன் சீனி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 600 மெற்றிக் தொன் சிவப்புச் சீனி காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த சிவப்பு சீனியின் பெறுமதி 241 மில்லியன் ரூபா எனவும் அந்த சீனியை அரசுடைமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## உலகின் பல செல்வந்தர்களின்...

தெரிய வந்துள்ளது.

தும்மலசூரிய பிரதேசத்தில் வசித்து வரும் மேற்படி இளைஞர் கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களில் மாத்திரமே சித்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வறுமையான குடும்பத்திலுள்ள மேற்படி இளைஞர் கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சைக்குப் பின்னர் கூலி வேலை செய்து சிறிய வருமானத்தை ஈட்டி அதன் மூலம் கையடக்கத் தொலைபேசி ஒன்றையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

கொரோனா தொற்று சூழ்நிலை காலத்தில் இணையதளம் மூலமான விளையாட்டுக்களில் அதிக ஈடுபாட்டுடன் அவர் விளையாடியுள்ளார். அதன் மூலமே இணையத்தளம் தொடர்பான மேலதிக அறிவை அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

அந்த விளையாட்டுகள் குழுவாக மேற்கொள்ளும் விளையாட்டுக்கள் என்பதால் அதில் சம்பந்தப்பட்டுள்ள நபர்களின் வங்கி கணக்குகளை ஹெக் செய்வது தொடர்பில் அந்த விளையாட்டில் ஈடுபடும் நபர்களின் தொடர்பாடல்களை செவிமடுத்து தரவுளை பெற்றுக் கொண்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது.

சந்தேக நபரது கணனியை பரிசோதனை செய்த வேளையில் அவரிடம் 05 இலட்சம் பெறுமதியான தரவுகளஞ்சியப் படுத்தப்பட்டிருந்ததாகவும் தரவுகளை உபயோகித்து அவர் இணையதளம் மூலம் பல்வேறு பொருட்களையும் கொள்வனவு செய்துள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கணனி, கெமராக்கள், பல்வேறு உணவுப் பொருட்கள், மதுபான வகைகள் உள்ளிட்ட பொருட்களை அவர் பல தடவைகளில் கொள்வனவு செய்துள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## லாஃப் சமையல் எரிவாயு...

நிறுவனம் தெரிவித்துள்ளது. விலைக் குறைப்பையடுத்து லாப் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் புதிய விலை 5080 ரூபாவாகும் என்றும் அதே வேளை, ஐந்து கிலோகிராம் எடை கொண்ட லாப் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 88 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 2032 ரூபாவாகும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 7 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

| தொழுகை நேரம் | |
|---|---|
| சுபஹ் | 05.03 |
| லுஹர் | 12.18 |
| அஸர் | 03.39 |
| மஃரிப் | 06.09 |
| இஷா | 07.24 |

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் மார்கழி 23
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# உத்தேச தேசிய இளைஞர் தளம்; விண்ணப்பிக்குமாறு அழைப்பு

**ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு**
**dir.ysd@presidentsoffice.lk மூலம் விண்ணப்பிக்கலாம்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய 75 ஆவது தேசிய சுதந்திர கொண்டாட்டத்துடன் இணைந்தாக உருவாக்கப்படவுள்ள தேசிய இளைஞர் தளத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2048 ஆம் ஆண்டளவில் வளமான மற்றும் பலம்மிக்க இலங்கையை கட்டியெழுப்பும் செயற்பாட்டின் ஒரு பங்காளர்களாவதற்கு இலங்கை இளைஞர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காகவும், 25 வருட கால அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் இளைஞர் சமூகத்தை பொறுப்பான பங்காளர்களாக ஈடுபடுத்துவதற்காகவும் தேசிய இளைஞர் தளம் உருவாக்கப்படவுள்ளது.

2048ஆம் ஆண்டளவில், தற்போதைய தலைமுறை இளைஞர்கள் பெரியவர்களாக வளர்ந்து நாட்டின் பொது மற்றும் தனியார் துறைகளில் முக்கிய பங்கு வகிப்பார்கள். இதன்படி, எதிர்கால அரசியல் முறைமை மற்றும் அரசியல்வாதிகள் பற்றி குறை கூறாமல் அபிவிருத்தியடைந்த இலங்கையை உருவாக்கும் பொறுப்பு அவர்களுக்கு வழங்கப்படும்.

நாட்டில் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இளைஞர் சமூகம் முன்னின்று செயற்பட வேண்டும் என்பதும், அதற்கான சிறந்த வாய்ப்பாக தேசிய இளைஞர் தளம் அமையுமென்பதே ஜனாதிபதியின் கருத்தாகும். சட்டம் மற்றும் பொருளாதாரம்/ கல்வி, தொழில் பயிற்சி, எதிர்காலத்திற்கான திறன்கள்/ நிலைபேரான அபிவிருத்தி மற்றும் காலநிலை நடவடிக்கை/ சுகாதாரம், பாதுகாப்பான உணவு மற்றும் நீர் தரநிலைகள்/ தேசிய பாதுகாப்பு/ இராஜதந்திரம் மற்றும் சர்வதேச உறவுகள்/ விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு/ விளையாட்டு/ அழகியற் கலை, சித்திரம், இசை , நாடகம், திரைப்படம், கட்டடக் கலை போன்றவை/

02

உள்ளூ. சபைகள் கலைப்பு தொடர்பாக

# தேர்தல் ஆணைக்குழுவே தீர்மானிக்க வேண்டும்

**பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உள்ளூராட்சி சபைகளை கலைப்பது தொடர்பான தீர்மானத்தை தேர்தல் ஆணைக்குழுவே மேற்கொள்ள வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று முன்தினம் (05) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவிப்பிற்கிணங்க அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக்காலமும் எதிர்வரும் மார்ச் மாதம் 18ஆம் திகதியே நிறைவடைகின்றது. அதன்படி தேர்தல் ஆணைக்குழுவே உள்ளூராட்சி சபைகளை கலைப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும் என்றும் பிரதமர் சபையில் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் செயற்பட்டு வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு வேட்புமனு கோரியுள்ளமை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி எம்.பி முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு

02

இளம் ஆசிரியர்களே இன்றைய தேவை

# ஒரு சிலரின் நலன்களை விட 42 இலட்சம் மாணவர்களின் எதிர்காலமே முக்கியம்

**கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாடசாலைகளுக்கு புதிதாக ஆசிரியர்களை நியமிக்கும்போது 35 வயதுக்கு குறைவானவர்களை நியமிக்குமாறு ஆசிரியர் சேவை யாப்பு குறிப்பிடும் போது 45 வயது நிரம்பியவர்களை அந்தச் சேவைக்கு நியமிப்பதன் மூலம் மாணவர்களே பாதிப்படைவர் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஒரு சிலரின் நன்மை கருதி தாம் செயற்படுவதா அல்லது நாட்டிலுள்ள 42 இலட்சம் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு செயற்படுவதா ? எது அவசியமானது என்றும் அமைச்சர் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார். பாராளுமன்றத்தில் தயாசிறி ஜயசேகர எம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், சிறந்த கல்வியை எமது மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டுமானால் சிறந்த ஆசிரியர்களை கல்வி கற்பிப்பதற்காக அந்த மாணவர்களுக்கு பெற்றுக்கொடுப்பது எமது பொறுப்பு. நாட்டின் 42 இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் அத்தகைய ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

தற்போது அரச சேவையிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளும் வயதெல்லையை 45 ஆக அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் சபையில் கேட்டுக்கொண்டார்.

02

# TNA இம்முறை தேர்தலில் வீடு சின்னத்தில் போட்டி

**இன்று மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியில் வீடு சின்னத்தில் போட்டியிடப்போவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

இன்று கிழக்கு மாகாணத்தில் களுவாஞ்சிக்குடியில் கூடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மத்திய செயற்குழு கூட்டத்தின்போது அது சம்பந்தமான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் கூட்டமைப்பின் பிரதான கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் தேடுதலில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தொடர்ந்தும் வீடு சின்னத்திலேயே போட்டியிட்டுவந்துள்ளதால் இம்முறையும் அதேசின்னத்திலேயே போட்டியிடவுள்ளதாகவும் அதுதொடர்பில் இன்று நடைபெறும் மத்திய செயற்குழு கூட்டத்தின்போது விரிவாக கலந்துரையாடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் உள்ளிட்ட கட்சிகள் அங்கத்துவம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

# சேவல் சின்னத்தில் போட்டியிட CWC முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சேவல் சின்னத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அந்த கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பொதுச்செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானின் தலைமையில் கொழும்பில் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையொன்றின் போதே, கட்சி உறுப்பினர்கள் அதுதொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இ.தொ.கா. கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் ஆகியோர் கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானின் தலைமையில் முக்கிய பேச்சுவார்த்தையை

02

ஸ்ரீதலதா மாளிகையை அவமதிப்பு:

# சேபால அமரசிங்கவுக்கு ஜன. 10 வரை விளக்கமறியல்

**மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று உத்தரவு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஸ்ரீதலதா மாளிகையை அவமதிக்கும் வகையில் சமூகவலைத்தளங்கள் மூலம் கருத்துக்களை வெளியிட்டுள்ள சமூக வலைத்தள செயற்பாட்டாளர் சேபால அமரசிங்க குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்கள அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவருக்கு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. அவரது செயற்பாடுகள் மத

02

# 60,000 மெ.தொன் நிலக்கரியுடன் கப்பல் நாட்டை வந்தடைவு

**மேலும் சில கப்பல்கள் அடுத்தடுத்த வாரங்களில்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மின்சார உற்பத்திக்கு தேவையான 60,000 மெற்றிக்தொன் நிலக்கரியுடன் கப்பலொன்று புத்தளம் துறைமுகத்தை வந்தடைந்ததாகவும் நிலக்கரியை கப்பலிலிருந்து இறக்கும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமணசேகர தெரிவித்துள்ளார்.

மேற்படி கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்ததையடுத்து நுரைச்சோலை அனல்மின் நிலைய உற்பத்தி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்சார உற்பத்திக்கான நிலக்கரி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கையிருப்பிலிருந்த நிலையில் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி இயந்திரம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நிறுத்திவைக்கப்பட்டது.

மேற்படி கப்பல் நாட்டுக்கு வரும் வரை கையிருப்பிலுள்ள நிலக்கரியை முகாமைத்துவம் செய்யும் வகையிலேயே அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

02

# முன்னாள் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் பிரேமதாச சில்வாவின் இறுதிக் கிரியைகள் நாளை

பாணந்துறை ஸ்ரீ சுமங்கள கல்லூரியின் முன்னாள் கிரிக்கெட் பயிற்சியாளர் பி.பிரேமதாச சில்வா காலமானார். அவர் முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் கௌஷால் சில்வாவின் தந்தை ஆவார். இறக்கும் போது அவருக்கு 80 வயது.

ஸ்ரீ சுமங்கள கல்லூரியின் பழைய மாணவரான பிரேமதாச, இந்த நாட்டில் கிரிக்கெட்டுக்கு பல சிறந்த வீரர்களை உருவாக்க பங்களித்தார். தேசிய அணி வீரர்களான டொன் அருணசிறி, இந்திக கல்லகே, கித்ருவான் விதானகே, தில்ருவன் பெரேரா, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உப தலைவர் ரவின் விக்கிரமரத்ன

02

149 பாடசாலைகளை இலக்காகக் கொண்டு:

# மேல் மாகாணத்தில் போதைப்பொருள் சுற்றிவளைப்பு; 55 பேர் கைது

**ஐஸ், ஹெரோயின், கஞ்சா மீட்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மேல் மாகாணத்தில் 149 பாடசாலைகளை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் தடுப்பு சுற்றிவளைப்புகளின் போது பொலிஸாரினால் 55 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்

02

ரீயூனியன் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# நீர்கொழும்பிலிருந்து பிரான்ஸ் சென்ற 53 இலங்கையரை நாடு கடத்த முடிவு

நீர்கொழும்பிலிருந்து சட்டவிரோதமாக படகு மூலம் பிரான்ஸ் சென்ற 53 இலங்கையர் பிரான்சுக்கு சொந்தமான ரீயூனியன் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 53 இலங்கையரில் 49 பேரை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அங்குள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் குறிப்பிட்டுள்ளனர்.04 இலங்கையரைத் தவிர 49 பேரை நாடு கடத்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

டிசம்பர் 03 ஆம் திகதி நீர்கொழும்பிலிருந்து 04 குழந்தைகள், 03 பெண்கள் மற்றும் விசேட தேவையுடைய ஒருவர் உட்பட 53 பேர் சட்டவிரோதமாக படகு மூலம் பிரான்ஸ் நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

அகதிகள் டிசம்பர் 24 அன்று பிரான்சுக்கு சொந்தமான ரீயூனியன் தீவை அடைந்தனர். தாம் பயணித்த படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நடுவழியில் தவித்ததாக இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பொறுப்பேற்று, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் “தமிழ்த் தேசிய அரசியல் கோட்பாட்டு உருவாக்கத்தில் சேர்.பொன். அருணாசலத்தின் வகிபாகம்” என்னும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் மா.கணபதிப்பிள்ளை உரை நிகழ்த்தவுள்ளார்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.91 | 255.11 |
| கனடியன் டொலர் | 263.86 | 275.73 |
| யூரோ | 382.82 | 398.41 |
| ஜப்பான் யென் | 2.7603 | 2.8723 |
| சிங்கப்பூர் டொலர் | 267.84 | 279.09 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 433.54 | 450.25 |
| சுவிஸ் பிராங்க் | 387.22 | 405.66 |
| அமெரிக்க டொலர் | 360.22 | 371.59 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 963.09 | கட்டார் ரியால் | 99.37 |
| குவைத் டினார் | 1,186.90 | சவூதி ரியால் | 96.59 |
| ஓமான் ரியால் | 943.09 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.86 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 23ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 13

**குறள் தரும் சிந்தனை**



பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்

அறிவில்லாதவனிடம் நெருங்கிய நட்புக் கொண்டிருப்பதை விட, அறிவுடைய ஒருவரிடம் பகை கொண்டிருப்பது கோடி மடங்கு மேலானதாகும்.

# தமிழ் அரசியல் தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டிய யதார்த்தம்!

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகள் மீண்டும் கூர்மையடைந்திருக்கின்றன. இனப்பிரச்சினைக்கு கொள்கையளவிலான இணக்கப்பாடொன்றை நாட்டின் சுதந்திர தினமான எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னராக ஏற்படுத்திக் கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமுயற்சி மேற்கொண்டு வருகின்றார்.

அதற்கு முன்னேற்பாடாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் தரப்புகளுடன் தொடர்பாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் அதிகளவான பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் ஆலோசனைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி, ஏனைய சில தமிழ் அரசியல் தரப்புகளும் இந்த விடயத்தில் இணக்கப்பாடான முறையில் கருத்துகளை முன்வைத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. எவ்வாறாயினும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு விரைவில் நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே தமிழ் அரசியல் தரப்பின் எண்ணமாக உள்ளது.

ஆனாலும் வழமையைப் போன்று வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளில் சில தரப்புகள் ஆரம்பத்திலேயே முரண்பாடான விதத்தில் கருத்துகளை வெளியிட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இன்றைய அரசாங்கத்தின் முயற்சியானது பயனளிக்கப் போவதில்லையெனவும், தமிழினத்தை ஏமாற்றுகின் நாடகமெனவும் அத்தரப்புகள் ஆரம்பத்திலேயே கூறி வருகின்றன.

தீர்வுகள் இன்னுமே எட்டப்படாத நிலையில் அக்கட்சிகள் இவ்வாறு கருத்துக் கூறுவது ஆரோக்கியமானதல்ல. அரசியல் தீர்வு முயற்சியை எவ்வாறாவது எதிர்க்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே அத்தரப்புகள் இவ்வாறு கருத்து வெளியிடுவதாக ஊகிக்க முடிகின்றது. அல்லது தமிழ்த்தரப்பின் ஏனைய கட்சிகளுடனான முரண்பாடு காரணமாகவே இவ்வாறான எதிர்க்கருத்துகளை அத்தரப்புகள் வெளியிடுவதாகத் தெரிகின்றது.

மற்றைய தரப்புகளுடனான முரண்பாடுகளை வைத்துக் கொண்டு இவ்வாறான விதத்தில் கருத்துகளை வெளியிடுவது தவறு. அக்கருத்துகள் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தக் கூடுமென்பதை அத்தரப்பினர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதேவேளை நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இவ்வாறு முட்டுக்கட்டை இடுவதும் நல்லதல்ல.

தமிழ்க் கட்சிகளின் அரசியல்வாதிகளில் ஏராளமானோர் தொடர்ச்சியாக எதிர்ப்பு அரசியலிலேயே தங்களது அரசியல் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். பெரும்பாலான தமிழ்க் கட்சிகளை எடுத்து நோக்கினால் அக்கட்சிகளுக்கிடையே ஒற்றுமை அரிதாகவே உள்ளது. அவை தங்களுக்கிடையில் முட்டி மோதிக் கொண்டுதான் அரசியல் நடத்தி வருகின்றன. அதுமாத்திரமன்றி ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கங்களுடன் எதிர்ப்பு அரசியல் நடத்துவதென்பது தமிழ் அரசியல் கட்சிகளின் மாற்ற முடியாத கலாசாரமாகியுள்ளது.

இலங்கையின் இரண்டாவது பெரும்பான்மை இனமாக தமிழர்கள் உள்ளனர். ஆனால் இரண்டாவது பெரும்பான்மையினருக்குரிய வசதிவாய்ப்புகள் மற்றும் சலுகைகளை தமிழினம் உரியபடி பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதற்குக் காரணம் தமிழ்க்கட்சிகளுக்கிடையேயான ஒற்றுமையின்மையே ஆகும். அக்கட்சிகள் தங்களுக்குள்ளேயே முட்டிமோதிக் கொள்ளும் போது எவ்வாறு அரசிடமிருந்து உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுக்க முடியும் என்ன வினா இங்கே எழுகின்றது.

ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கத்துடன் இணக்கப்பாடாகச் செயற்பட்டு தமது இனத்துக்கான சலுகைகள் மற்றும் வசதிவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வது குறித்து தமிழ்க்கட்சிகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற சுமார் ஏழு தசாப்த காலப் பிரச்சினைக்குரிய தீர்வைக் காண்பது மிகவும் அவசியமானதென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இனப்பிரச்சினைத் தீர்வின் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையாகவே ஏற்றுக் கொண்டுள்ளார். அதுமாத்திரமன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்துக்கு ஆதரவளித்து வருகின்ற அரசியல் தரப்பினரும் இக்கருத்துக்கு ஆதரவாகவே உள்ளனர்.

இவ்வாறான நிலையில் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் தரப்பினர் முழுமையான ஆதரவு வழங்கினால் மாத்திரமே தீர்வை நோக்கி நம்பிக்கையுடன் பயணம் செய்ய முடியும். முரண்பாடான நிலைப்பாட்டுடன் செயற்பட்டால் இனப்பிரச்சினைக்கு எக்காலமுமே தீர்வைக் கண்டு கொள்ள முடியாதென்பதை சம்பந்தப்பட்ட தமிழர் தரப்புகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் இவ்வாறிருக்கையில், நாட்டின் தபொருளாதார நெருக்கடி நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் குறிக்கோளை மாத்திரம் முன்னிலைப்படுத்தி எதிரணி போராடி வருகின்றது. நாட்டுக்கு தற்போது அவசியமானது அரசியலா அல்லது பொருளாதார மீட்சியா என்பதையிட்டு எதிரணி சிந்திக்க வேண்டியது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைத்து இனமக்களின் பாராட்டை பெற்ற அரசாங்க அதிபராகப் பணியாற்றியவர் கே.கருணாகரன்

## அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவருக்கு பலரும் புகழாரம்



மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக கடந்த 2020 செப்டம்பர் மாதம் முதல் 2022.12.31 வரை கடமையாற்றி வந்த கணபதிப்பிள்ளை கருணாகரன் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் 1984 ஆம் ஆண்டு வானிலை அவதானிப்பாளராக வளிமண்டலவியல் திணைக்களத்தில் அரச கடமைக்குச் சேர்ந்த பின்னர் ஆறு வருடங்கள் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராக வந்தார். அதன் பின்னர் 1991 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்குள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவானார்.

அதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச செயலாளராகவும், மாவட்ட செயலகத்தில் புணர்வாழ்வு இணைப்பாளராகவும் பணிபுரிந்தார். இவர் இலங்கை அரசின் புலமைப் பரிசில் பெற்று லண்டன் சென்று, சர்வதேச பொதுமுகாமைத்துவத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். 2009 ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று கிழக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளராக பதவியேற்றார்.

அதன் பின்னர் கிழக்கு மாகாண பேரவையின் செயலாளராகவும், சுகாதார அமைச்சின் செயலாளராகவும் ,வீதி அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் செயலாளராகவும் பல்வேறு பதவிகளை வகித்து, 2020 செப்டம்பர் மாதம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக கடமையைப் பொறுப்பேற்றார்.

இவர் அரசாங்க அதிபராக கடமை வகித்த காலப்பகுதியில் நாடு எதிர் நோக்கிய கொரோனா வைரஸ் தாக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மாவட்ட நிர்வாகத்தை திறம்பட மேற்கொண்டதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் மூலம் தம்மால் முடியுமான உச்ச அளவிலான நிவாரணத்தை பெற்றுக் கொடுத்தார். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பல்வேறு வகையான உபகரணங்கள் கிடைப்பதற்கு பல தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து பணியாற்றியிருந்தார்.

இந்நிலையில் மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நலனிலும் அதிக அக்கறையுடன் செயல்பட்டதுடன், அவர்களுக்கான எரிபொருள், உரம் மற்றும் நீர்ப்பாசன பிரச்சினைகளுக்கு தம்மால் முடியுமான உரிய தீர்வை சம்பந்தப்பட்ட அமைச்சிகளினூடாக பெற்றுக் கொடுத்திருந்தார்.

அது மாத்திரமன்றி இவரது காலத்தில் பலதரப்பட்ட இனங்களுக்கு மத்தியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளினூடாக இனநல்லுறவை கட்டியெழுப்புவதில் அதிக அக்கறையுடன் செயல்பட்டார்.

இவர் அரசாங்க அதிபராக கடமை வகிந்த காலப் பகுதியில் மாவட்டத்தில் எவ்வித இனமுரண்பாடுகளும் ஏற்படாத வகையில் தமது பணியினைத் தொடர்ந்து வந்தார். மேலும் இளைஞர்களை போதைப் பொருள் பாவனையில் இருந்து மீட்பதற்கும் அது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் பணியாற்றினார். போதைப் பொருள் ஒழிப்புக்கான பல்வேறு வேலைத்திட்டங்களை பொலிசார் மற்றும் இராணுவத்தினர்,சுகாதாரத் துறையினர், பிரதேச செயலாளர்கள், ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தி வந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சர்வதேச, தேசிய, மாகாண மட்டத்தில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்கள், கல்வியில் சிறந்த அடைவுமட்டத்தை பெற்ற மாணவர்களைப் பாராட்டி 'வர்ண விருது' நிகழ்வை சிறப்பாக நடத்தியதுடன், அவர்களை கௌரவித்து 'வெற்றி' எனும் சிறப்பு மலரையும் வெளியிட்டிருந்தது மட்டக்களப்பு மாவட்ட செயலகம்.

தமது பணியினை நேரகாலம் பாராது மிகச் சிறப்பாக மேற்கொண்டு வந்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தற்போது அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது சேவையினை மாவட்டத்தின் அனைத்து இன மக்களும் உயர்வாக மதித்து பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

எம்.ரீ.எம்.பாரிஸ்...

# அகில் மரத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய முன்னோடி நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வு




பசுமை முதலீட்டுத் துறையில் இலங்கையின் முன்னோடியும், அகில் மரத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியதில் முன்னோடியுமான சதாஹரித குழுமத்தின் 20212022 இற்கான வருடாந்த விருதுகள் நிகழ்வு அண்மையில் தெஹிவளை அத்திடிய ஈகிள்ஸ் லேக்சைட்டில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சதாஹரித நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவர் சதீஸ் நவரத்ன மற்றும் 650 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் உட்பட இத்துறை சார்ந்த பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் நிறுவனத்திற்கு முன்மாதிரியாக சேவை ஆற்றியவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் உள்ளிட்ட 150 க்கும் மேற்பட்ட பணப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சதாஹரித பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இந்த ஆண்டு விருது வழங்கும் விழா 'Forestry Award 2022 REDEFINING RESILIENCE' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்றது.

இந்த விருதுகளில் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள், பணப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் ஆகியவை அடங்கும். 2021/22 ஆண்டுகளில் சிறந்து விளங்கிய சந்தைப்படுத்தல் பிரிவைச் சேர்ந்த ஊழியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், சந்தைப்படுத்தல் பிரிவில் மற்றவர்களை விடவும் விஞ்சிய வகையில் செயல்பட்டவர்களுக்கான 'மிகச் சிறந்த சேவை' பிரிவில் 07 விசேட விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய பணிப்பாளர் சபைத் தலைவர் சதீஸ் நவரத்ன, "எமது பணியாளர்கள் வெளிப்படுத்தும் பணியின் தரம் மற்றும் உற்சாகம் குறித்து நான் மீண்டும் மீண்டும் வியப்படைகிறேன். நமது நாட்டின் பொருளாதாரம் நெருக்கடியில் இருக்கும் நேரத்திலும் நாங்கள் எங்கள் வணிக இலக்குகளை அடைய முடிந்ததுடன், முன்மாதிரியான செயல்திறன் பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளோம். அகில் மரத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியதில் முன்னோடி என்ற வகையில், கடந்த பல ஆண்டுகளாக உள்ளூர் சந்தையில் சிறந்த அகில் மர வழங்குநர் என்ற நற்பெயரை நாங்கள் சம்பாதித்துள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

உள்ளூர் அகில் மர சந்தையில் முன்னணி வர்த்தகநாமமான சதாஹரித, 20 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட போது வேப்பமர பசுமை முதலீட்டை அறிமுகப்படுத்தியது. மேலும், வேப்பமர முதலீட்டில் 20 வருடங்களை பூர்த்தி செய்த மூன்று வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

சதாஹரித லிமிட்டெட் நிறுவனத்தின், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளர்ஜெயம்பதி மிராண்டோ அவர்கள் கூறுகையில், "எங்கள் ஊழியர்களுக்கு அவர்களின் தொழில்முறை வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கு நிறுவனம் வழங்கிய இந்த ஆதரவு நிறுவனத்தின் வெற்றிகரமான எதிர்காலத்தை உறுதி செய்கிறது" என்று குறிப்பிட்டார்.

# புதுவருடத்தின் முதலாவது ஜல்லிக்கட்டு திடீர் நிறுத்தம்!



## புதுக்கோட்டை தச்சங்குறிச்சியில் நேற்று வெகுண்டெழுந்த மக்கள்!

தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை பகுதிக்குட்பட்ட தச்சங்குறிச்சியில் நேற்று நடைபெற இருந்த ஜல்லிக்கட்டு போட்டிக்கு மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு அனுமதி மறுத்திருந்த நிலையில், போட்டி தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுவதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. இதனால் அப்பகுதியில் ஏராளமான பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆண்டு தோறும் புத்தாண்டு அன்று தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுவது வழக்கம். இது நாளடைவில் ஜனவரி 2 ஆம் திகதியன்று நடத்தப்பட்டு வந்தது. இந்நிலையில், இந்த ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி அதாவது நேற்று போட்டி நடைபெற இருந்தது. இந்த ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி இது என்பதால் மாவட்டம் முழுவதும் மக்கள் பெரும் எதிர்பார்ப்போடு காத்திருந்தனர். அதேபோல தமிழ்நாடு அரசும் போட்டி நடத்துவதற்கான அரசாணையை வெளியிட்டது.

வழக்கமாக போட்டி ஜனவரி 2 ஆம் தேதியன்று நடைபெறும். ஆனால் விழா கமிட்டியினர் போட்டிக்கு உரிய அனுமதியை முன்கூட்டியே கோரவில்லை. எனவே மாவட்ட நிர்வாகமும் அனுமதியளிக்கவில்லை. இதனால்தான் போட்டி 2 ஆம் தேதியிலிருந்து 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதன் பின்னரே அரசு அரசாணையை வெளியிட்டது. தமிழ்நாட்டை பொறுத்த அளவில் புதுக்கோட்டை மாவட்டம்தான் ஜல்லிக்கட்டு பொட்டியில் உச்சத்தில் உள்ளது. ஏனெனில் இங்குதான் மற்ற மாவட்டங்களைவிட அதிகமான அளவில் வாடிவாசல்கள் இருக்கின்றன.

அதிகமான அளவு வாடிவாசல் கொண்ட மாவட்டம், ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு நடத்தும் மாவட்டம் என்கின்ற பெருமையை புதுக்கோட்டை கொண்டிருப்பதால் ஜல்லிக்கட்டு போட்டிக்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வாடிவாசலை சரி செய்து, பார்வையாளர்கள் அமர்வதற்கான இடம், மாடு பிடி வீரர்கள் காயமடையாமல் இருப்பதற்கு வைக்கோல் கொண்டு நிரப்பப்பட்ட வாடி வாசல் பாதை என எல்லா ஏற்பாடுகளும் நடந்து முடிந்தன.

பின்னர், மாடுகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கான ஒன்லைன் முன்பதிவும் தொடங்கியது. பலரும் ஆர்வமாக தங்களது பெயரை பதிவு செய்து போட்டிக்காக காத்திருந்தனர்.

இந்நிலையில்தான், மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு, எஸ்பி வந்திதா பாண்டே மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் ஆகியோர் போட்டி நடைபெறும் இடத்தை பார்வையிட்டனர். பின்னர் போட்டிக்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி செய்யப்படவில்லை என்று கூறி அனுமதி மறுக்கப்படுவதாக ஆட்சியர் அறிவித்தார். இது மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. போட்டி நேற்று நடைபெறும் என்று நேற்றே வெளியூரிலிருந்து மாடுபிடி வீரர்கள் தச்சங்குறிச்சிக்கு வந்து சேர்ந்திருந்தனர். ஆனால் ஆட்சியர் அனுமதி வழங்காததை சற்றும் எதிர்பார்க்காத இவர்கள் கடும் கோபமடைந்தனர்.

பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளின் வாகனத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். போராட்டக்காரர்களுடன் பொலிசார் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது ஆட்சியர் அனுமதி மறுத்ததற்கான காரணத்தை அவர்களுக்கு விளக்கினர். அதாவது, வாடி வாசலிலிருந்து காளைகள் வெளிவரும் இடம் சரியாக அமைக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டினர். மேலும், மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளுக்கு ஒன்லைன் முறையில் டோக்கன் வழங்காதது, மாடுபிடி வீரர்களுக்கு கொரோனா பரிசோதனை ஆர்டிபிசிஆர் முறையில் மேற்கொள்ளாதது ஆகியவற்றை பொலிசார் சுட்டிக்காட்டினர்.

இந்த விளக்கத்தை ஏற்காத பொதுமக்கள் நேற்றுமுன்தினமிரவு வீதி மறியலில் ஈடுபட்டனர். ஆங்காங்கே சிறிது சிறியதாக வசூல் செய்து போட்டி நடத்துவதற்கு ஏற்பாடு செய்தால் இப்படி நடத்த விடாமல் முட்டுக்கட்டை போடுவது சரிதானா? என்றும் அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். இதனையடுத்து நேற்று நடைபெற இருந்த போட்டி தள்ளி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து கிராம மக்களுடன் பொலிசார் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர். ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி தள்ளி வைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது. இதனையடுத்து அக்கிராமத்தில் ஏராளமாக பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர்.



# வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உள்ளத்தில் சீனா இடம்பிடிப்பது சாத்தியமான விடயமா?

**இலங்கையின் வடபகுதியில் முதலீட்டுத் திட்டங்கள் வாயிலாக படிப்படியாக கால்பதிக்கத் தொடங்கியுள்ள சீனா, தற்போது வடக்குத் தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவரும் நோக்குடன் மறைமுக முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தமிழ் அரசியல்வாதிகள் பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.**

கடலட்டைப் பண்ணை போன்ற திட்டங்கள் மூலம் வடக்கு நிலத்தில் கால்பதிக்க சீனா முற்படுவதாகவும், வடக்கில் இந்தியாவின் வகிபாகத்தைத் தடுக்கும் வகையிலேயே சீனா இவ்விதமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் வடபகுதி மக்கள் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் சமீபத்தில் வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு பல்வேறு இடங்களுக்குச் சென்றிருந்தார். சீனத்தூதுவரின் விஜயமானது அவ்வேளையில் வடபகுதி மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

அதன் தொடர்ச்சியாக கடந்த வாரம் இலங்கைக்கான சீனாவின் பிரதித் தூதுவர் ஹூ வெய் உள்ளிட்ட சீன அதிகாரிகள் குழுவொன்று வட மாகாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டு வடக்கின் பல பகுதிகளிலும் சீன அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியிருந்தது.

சீனத்தூதரகக் குழுவினர் யாழ்.மாவட்ட செயலகத்திற்கும் சென்றிருந்தனர். அன்றைய தினம் மாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டைக்கும் அவர்கள் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது யாழ் ஒல்லாந்தர் கோட்டையின் புராதன வரலாறுகள் குறித்து சீன அதிகாரிகள் கேட்டறிந்து கொண்ட அதேவேளை, அப்பகுதியில் அமைந்துள்ள பல புராதன சின்னங்களையும் பார்வையிட்டிருந்தனர்.

சீனத் தூதரகத்தின் அதிகாரி ஒருவர் தமிழர்களின் கலாசார உடையான பட்டு வேட்டியுடன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தமை பலரையும் ஈர்த்துள்ள விடயமாக இருந்தது. வடபகுதி தமிழ் மக்களின் உள்ளத்தில் இடம்பிடிப்பதற்கு சீனா பிரயத்தனப்படுவதாக வடக்கின் புத்திஜீவிகள் இதுகுறித்து கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதித் தூதர் ஹூ வெய், சீனத்தூதரக அரசியல் விவகார அதிகாரி லியோ சொங் உள்ளிட்ட மூவரடங்கிய குழுவினரே இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தனர். அக்குழுவில் அடங்கியிருந்த பிரதிநிதி ஒருவரே பட்டு வேட்டியுடன் காணப்பட்டார்.

சீனத் தூதரகத்தின் அதிகாரி ஒருவர் தமிழர்களின் கலாசார உடையான பட்டு வேட்டியுடன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததை தமிழ் மக்கள் விசித்திரமாகப் பார்த்ததையும் காண முடிந்தது.

## உதவிப் பொருட்களை வழங்குவதன் மூலம் தமிழர்களை நெருங்குவதற்கு முயற்சி!



இந்நிலையில் சீன மக்களினால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகள் யாழ் மாவட்ட மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அந்த உணவுகள் வடபகுதி தமிழ் மக்களுக்கு பொருத்தமில்லாத உணவுகளென்று அங்குள்ள பிரமுகர்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவ்வாறான தரமற்ற உணவுப் பொருட்களை தமிழ் மக்களுக்கு வழங்குவது அவசியமற்றதெனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

அதேவேளை மத மற்றும் கலாசார ரீதியாக இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ள வடபகுதி தமிழ் மக்களின் உணர்வுகளை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டுமெனவும் வடக்கு மக்கள் பலர் தெரிவித்திருந்தனர்.

வடக்கு மக்களுக்கான உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டிருந்த அந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனாவின் பிரதித் தூதர் ஹூவெய் கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

யாழ் மாவட்டத்தில் 1320 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில், முதல் கட்டமாக அன்றைய தினம் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 100 பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்நிகழ்வில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிகாரிகளுடன் சீன அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த உணவுப் பொருள் வழங்கலின் போது சீனாவின் அரிசியை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்ற விளக்கத்தையும் சீன அதிகாரியொருவர் வழங்கியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு சீனா அரசு வழங்கிய அரிசியை மிதமான வெப்பநிலையில் சில நிமிடங்களில் வேக வைத்து எடுக்க வேண்டும் என இலங்கைக்கான சீன பிரதித் தூதர் யாழ்ப்பாணத்தில் விளக்கம் அளித்திருந்தார்.

இலங்கை மக்கள் உள்நாட்டு அரசிக்கும், இந்திய அரிசிக்குமே பழக்கப்பட்டவர்களாவர். சீனாவின் அரிசி இலங்கை மக்களுக்கு பழக்கப்பட்டதல்ல. அந்த அரிசி யாழ்ப்பாணம் மக்களின் உணவுக்கு உகந்ததாக இல்லையென அங்குள்ள பலரும் தெரிவிக்கின்றனர்.

மக்களுக்கான நிவாரணப் பொதி வழங்கும் நிகழ்வில் வைத்து ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே சீன பிரதித் தூதுவர் இவ்வாறு பதிலளித்தார்.

"சீனா வழங்கிய 10 கிலோ அரிசியை சமைக்கும் போது அது களி போன்று ஆகி விடுகிறது அல்லது பசைத்தன்மை அதிகம் உள்ளதாக மாறுகிறது" என்று மக்கள் குற்றச்சாட்டுவதாக ஊடகவியலாளர் ஒருவரால் பிரதித் தூதருக்கு எடுத்துக் கூறப்பட்டிருந்தது.

இதன்போது பதிலளித்த தூதுவர், "சீனா வழங்கிய அரிசியை சமைக்கும் முறையில்தான் பிரச்சினை இருக்கிறது. மிருதுவான வெப்பநிலையில் சமைக்க வேண்டும்" என அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள சீன உதவித் தூதுவர் குழுவினர், கோட்டைக்கு விஜயம் செய்திருந்த போது "கோட்டையில் புலிகளுடன் சண்டை நடந்ததா?" என்ற கேள்வியை பாதுகாப்பு பொலிசார் ஒருவரிடம் எழுப்பியுள்ளார்.

அதற்கு "ஆம், நடந்தது" என்ற பதில் வழங்கப்பட்டிருந்தது.

சீன குழுவினர் யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தையும் பார்வையிட்டிருந்தனர்.

இதேபோன்று கிழக்கிலும் மக்களுக்கான உதவிப் பொருட்களை வழங்குவதில் சீனா தற்போது அக்கறை காட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது. வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்தியா நீண்ட காலமாக பல்வேறு வித்திலும் உதவிகளை வழங்கி வருகின்றதென்பது தெரிந்த விடயமாகும். இவ்வாறிருக்கையில் சீனா வடக்கு, கிழக்கு மக்கள் விடயத்தில் அக்கறை காண்பிப்பதை தற்போது காண முடிகின்றது.

ஆனாலும் வடக்கு, கிழக்கு தமிழர்களின் மனங்களை சீனா வெல்வது கடினம் என்று தென்னிலங்கை பெரும்பான்மை மக்களே கருத்துத் தெரிவிக்கின்றனர்.

வடக்கில் சீன அதிகாரிகளின் வருகை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் வரவேற்பைக் காண முடியவில்லை.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் மத ரீதியாகவும், மொழி ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் இந்திய மக்களுடன் நெருக்கமாக உள்ளனர். இந்நிலையில் தமிழர்களின் மனங்களில் இடம்பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தை கொண்டே சீன அதிகாரிகள் செயற்படுவதாக ஊகிக்கப்படுகின்றது.

## சீனா வழங்கிய உணவுப் பொருட்கள் வடபகுதி மக்களுக்குப் பொருத்தமற்றவையென பலரும் கருத்து!





**எஸ். சாரங்கன்...**

---

# கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இன்று பாலேந்திராவின் நூல் வெளியீடு

**அரை நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ் நாடகக் கலை வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் கலைஞர் க. பாலேந்திராவின் 'அரங்கக் கட்டுரைகள்' எனும் புதிய நூலின் வெளியீட்டு அரங்கு இன்று 07ஆம் திகதி சனிக்கிழமை மாலை 430 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் நடைபெறுகிறது.**

ஈழத்து நவீன தமிழ் நாடக உலகில் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இயங்கிவருபவரும், தற்போது இங்கிலாந்தில் வசிப்பவருமான கலைஞரும் நாடக இயக்குநருமான க. பாலேந்திரா எழுதி, கொழும்பு குமரன் இல்லம் பதிப்பகத்தினால் வெளியாகியிருக்கும் பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள் நூலில், அவர் ஏற்கனவே எழுதி ஊடகங்களில் வெளியான பல ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன்னரே பாலேந்திரா நவீன நாடக அரங்கு பற்றி எழுதியிருக்கின்றார். அக்காலப்பகுதியில் அத்தகைய எழுத்துக்களை காண்பது அரிது. அந்த வகையில் அக்கட்டுரைகள் இடம்பெற்றிருக்கும் இத்தொகுப்பானது நாடகக்கலை தொடர்பாக பயிலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உசாத்துணையாக அமையும்.


நான்கு உப தலைப்புகளில் இக்கட்டுரைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.



பாலேந்திரா



செல்வராஜா




இந்திரா பார்த்தசாரதி

அரங்காற்றுகையில் தோன்றும் பிரச்சினைகள், நாடக சர்ச்சைகள், பாலேந்திரா தமிழுக்கு அறிமுகப்படுத்திய பிற மொழி நாடகாசிரியர்கள், புலம்பெயர் நாடக அனுபவங்கள் முதலான பிரிவுகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

இந்திய மூத்த தமிழ்ப்படைப்பாளியும் சிறந்த நாடக ஆசிரியருமான இந்திரா பார்த்தசாரதி இந்நூலுக்கு அணிந்துரை எழுதியிருக்கிறார்.

பாரிஸ் இளம் கலைஞர் ஓவியர் வாசுகனின் ஓவியம் நூலின் முகப்பினை அலங்கரிக்கிறது. இங்கிலாந்தில் வதியும் நூலகவியலாளர் என். செல்வராஜா, பாலேந்திரா பற்றிய பல தகவல்களை இந்நூலில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தமிழ்ச்சங்கம் வினோதன் மண்டபத்தில் இன்று 07 ஆம் திகதி மாலை 430 மணிக்கு நடைபெறுகின்ற இந்நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு கலை இலக்கியவாதிகள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.





## தமிழ் நாடகக்கலை வளர்ச்சியில் மாபெரும் கலைஞனின் அரிய படைப்பு

**லெ. முருகபூபதி...**
அவுஸ்திரேலியா

---

# கொழும்பு துறைமுகநகரத்தை நேரில் பார்வையிட்ட பிரித்தானிய முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன்

**பிரிட்டனின் முன்னாள் பிரதமரான டேவிட் கமரூன், இலங்கைக்கு தனிப்பட்ட பயணம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டிருந்த போது, கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தை நேரில் வருகை தந்து பார்வையிட்டுள்ளார்.**

ஆணைக்குழு உறுப்பினர் ரியாஸ் மிகுலர் மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சட்ட மற்றும் நிறுவன விவகாரங்களுக்கான பணிப்பாளர் விந்தியா வீரசேகர, CHEC Port City Colombo (Pvt) Ltd இன் முகாமைத்துவப் பணிப்பாளரான யாங் லூ ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட கமரூன், அரசதனியார் கூட்டாண்மையின் அம்சங்களையும், பொருளாதாரத்தை மாற்றியமைப்பதில் இத்திட்டத்தின் வினையூக்கமான வகிபாகத்தையும் கேட்டறிந்து கொண்டார்.

இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் பணிப்பாளர் நாயகமான ரேணுகா வீரக்கோனும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார். முன்னாள் பிரதமருக்கு விளக்கமளித்த CHEC Port City Colombo (pvt) Ltd இன் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளரான துல்சி அலுவிஹார, வணிகங்கள் கொழும்பு துறைமுக நகரத்தைப் பிராந்தியத்தை அணுகுவதற்கான ஒரு தளமாகப் பயன்படுத்துவதற்கான இலக்கினை ஈர்க்கும் வகையில் உருவாக்குவதே இலட்சியம் என்று விளக்கினார்.

மேலும், கவர்ச்சிகரமான ஒழுங்குமுறை நிர்வாக ஆட்சியுடன், கொழும்பு துறைமுக நகரமானது அதன் செலவுரீதியான போட்டி அனுகூலம் மற்றும் கவர்ச்சிகரமான வாழ்க்கைத் தரத்துடன் சிங்கப்பூர் மற்றும் துபாய்க்கு மாற்று இடமாக நிலைநிறுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கமரூனின் கேள்வியொன்றுக்கு பதிலளித்த அலுவிஹார, கொழும்பு துறைமுக நகரத்தின் புவியியல் அமைவிட அனுகூலத்திற்கு அப்பால், வணிக நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுப்பதில் நிதி மற்றும் நிதி அல்லாத சலுகைகளின் விரிவான அம்சங்களை இது வழங்குகிறது என்று விளக்கினார்.



இந்த ஆணைக்குழுவானது ஒரு ஒற்றை மார்க்க முதலீட்டு அனுசரணையாளராக உள்ளதுடன், இது மாறும் விதிமுறைகள், தாராளமய அந்நிய செலாவணி ஆட்சி, திறந்த தொழிலாளர் சந்தை மற்றும் கவர்ச்சிகரமான முதலீட்டு ஊக்குவிப்புகளை செயல்படுத்தும் திறன் கொண்டது. மேலும், இலங்கையின் முதல் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நகரமாக, கொழும்பு துறைமுக நகரமானது சூழல்நேய மற்றும் திறன் வாழ்க்கையை மையமாகக் கொண்ட கவர்ச்சிகரமான வாழ்க்கைச் சூழலை உருவாக்கும். கமரூனின் இச்செயற்திட்டத் தளத்திற்கான விஜயம் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு கொழும்பு துறைமுக நகரத்தை ஊக்குவிப்பதில் மகத்தான ஒத்துழைப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். 2023 இல் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தைப் பார்வையிட்ட முதல் உயர்மட்டப் பிரதிநிதியும் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.





# கிழக்கின் குரல்



## பொத்துவிலில் நுளம்புகள் பரவும் இடங்களை வைத்திருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை

### பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி

**ஒலுவில் விசேட நிருபர்**



பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி, வைத்தியர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் காணப்படும் குப்பைகளை அகற்றி, நீர் தேங்கியுள்ள இடங்களைச் சுத்தம் செய்து நுளம்புகள் பெருகுவதற்கு இடங்கொடுக்காத வகையில் இருக்குமாறு, நேற்று (06) அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனைக்கமைய டெங்கொழிப்பு நடவடிக்கைக்காக நியமிக்கப்பட்டுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து வீடுகளில் டெங்குச் சோதனை மேற்கொள்ளவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவாக வெற்றுக் காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்துக்குள் சுத்தம் செய்ய வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டவர்கள் ஒரு வார காலத்துக்குள் சுற்றுப்புறச் சூழலை சுத்தம் செய்யுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த போதிலும், அதனை மீறியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி பாண்டிருப்பில் ஆர்ப்பாட்டம்



**காரைதீவு குறூப், கல்லடி குறூப் நிருபர்கள்**

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயிலுக்கு முன்பாகவும் மட்டக்களப்பு காந்தி பூங்காவிலும் நேற்று (06) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில், 'ஒருமித்த குரலினை உரக்கச் சொல்வோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தமது கோரிக்கை அடங்கிய சுலோக அட்டைகளை தாங்கியிருந்ததுடன், கோஷமும் எழுப்பினர்.

## சுவாமி விவேகானந்தரின் 161ஆவது ஜெயந்தி தினம்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**

சுவாமி விவேகானந்தரின் 161 ஆவது ஜெயந்தி தின விழா எதிர்வரும் 14ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடி இராமகிருஷ்ணமிசன் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இராமகிருஷ்ணமிசன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா மகராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மங்களாராத்தி, திருப்பள்ளியெழுச்சி, பஜனை, ஹோமம் ஆகியவற்றுடன் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் தாங்கிய ரத பவனி எதிர்வரும் 13ஆம் திகதி மாலை மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதி மற்றும் கல்லடி பிரதான வீதிகளூடாக வலம் வரவுள்ளது.

### கிண்ணியாவில்

## சோளச் செய்கையில் மீண்டும் படைப்புழுக்களின் தாக்கம்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

கிண்ணியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட சோளச் செய்கையானது படைப்புழுக்களினால் பாதிக்கப்படுவதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

அயிலியடி வட்டமடு, கிரான், குரங்குப்பாஞ்சான், கள்ளருப்பு, மஜித் நகர், பனிச்சையடி போன்ற பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட சோளச் செய்கையிலேயே, படைப்புழுக்களின் தாக்கம் காணப்படுவதாகவும், நேற்று (06) விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த முறையும் தமது சோளச் செய்கையில் படைப்புழுத் தாக்கம் காணப்பட்டதாகவும் இதனால், தமக்கு பாரிய நட்டம் ஏற்பட்டதாகவும், விவசாயியொருவர் தெரிவித்தார். கடந்த தமது சோளச் செய்கை படைப்புழுக்களினால் பாதிக்கப்பட்ட போது, விவசாயத் திணைக்கள அதிகாரிகள் பார்வையிட்டு விட்டுச் சென்ற போதிலும், இதுவரையில் நட்டஈடு வழங்கப்படவில்லையெனவும், அவ்விவசாயி தெரிவித்தார்.

எனவே, இம்முறையாவது படைப்புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன், நட்டஈட்டை பெற்றுத் தருமாறும், விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## திருவாதிரைத் தீர்த்தோற்சவம்



மட்டக்களப்பு, களுதாவளை சித்தி விநாயகர் மாரியம்மன் கோயிலின் வருடாந்த மார்கழித் திங்கள் திருவாதிரைத் தீர்த்தோற்சவம், களுதாவளை கடற்கரையில் நேற்று (06) நடைபெற்ற பின்னர், பக்தர்கள் புடைசூழ மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி வழியாக சுவாமி கோவிலுக்கு செல்வதை படத்தில் காணலாம். (படம்: மட்டக்களப்பு விசேட நிருபர்)

## மட்டக்களப்பு – கல்முனை வீதி விபத்தில் மூவர் காயம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் காத்தன்குடி களுவாஞ்சிக்குடி எல்லையில் இடம்பெற்றுள்ள வாகன விபத்தில் படுகாயமடைந்த மூவர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (06) அதிகாலை வேளையில் காத்தான்குடியிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியும் கல்முனையிலிருந்து வாழைச்சேனை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில், இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணம் செய்த 69 வயது முதியவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த 17, 19 வயதுடைய இளைஞர்கள் இருவரும் இவ்விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

இதன்போது, இரு வாகனங்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இவ்விபத்துத் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விரிவான விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## நற்பிட்டிமுனையில் தையல் பயிற்சி வகுப்பு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்துவிட்டு தொழிலற்றிருக்கும் யுவதிகளுக்காக நற்பிட்டிமுனையின் சேனைக்குடியிருப்பு எல்லையிலுள்ள விதாதாவள நிலையத்தில் தையல் பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி நிலையத்தில், 50 க்கும் மேற்பட்ட யுவதிகள் இணைந்து கொண்டு தையல் பயிற்சியை பழகி வருகின்றனர். இப்பயிற்சிநெறியானது எதிர்வரும் டிசம்பரில் பூர்த்தி செய்யப்படுமென, தையல் பயிற்சிநெறி போதனாசிரியை பரராசசிங்கம் தெரிவித்தார்.

## பாலம்போட்டாறு பத்தினிபுரத்தில் பாரியளவில் சோளம் அறுவடை



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் பாலம்போட்டாறு பத்தினிபுரம் பகுதியில் சோளம் அறுவடை கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

'சௌபாக்கியா' உற்பத்திக் கிராமம் திட்டத்தின் கீழ் இந்த அறுவடை மேற்கொள்ளப்பட்டதுடன், இதில் பாரியளவு விளைச்சல் கிடைத்துள்ளதாகவும், சோளம் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

பாலம்போட்டாறு பத்தினிபுரம் பகுதியைச் சேர்ந்த தோட்டத் தொழில் உற்பத்தியாளர்களின் நிலங்களை தரிசு நிலங்களாக மாற விடாமல் பயிர்ச் செய்கையினூடாக அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இச்சோளம் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த அறுவடையின் போது, தம்பலகாமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், விவசாயப் போதனாசிரியர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கடல்சார் மனிதக் கடத்தல்; மட்டக்களப்பில் செயலமர்வு



**புதிய காத்தான்குடி, பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்**

நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தின் சூழலில், கடல்சார் மனிதக் கடத்தல் பற்றிய விழிப்புணர்வுச் செயலமர்வொன்று, மட்டக்களப்பு எஸ்கோ நிறுவனத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களை மையப்படுத்தி, குளோபல் இனிசெட்டிவ் மற்றும் சி.டி.எஸ். ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன், 'எஸ்கோ' எனும் கிழக்கிலங்கை சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பினால் இச்செயலமர்வு நேற்று (05) முன்தினம் நடத்தப்பட்டது.

சட்டவிரோதக் கடல்வழிப் பயணம், கடல் வழியாக ஆட்கடத்தல், சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக வெளிநாடு செல்வதற்கு முற்படுபவர்களின் நிலைமை உள்ளிட்டவை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு எஸ்கோ நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் எஸ்.உதயேந்திரன் விளக்கமளித்தார்.

## திருகோணமலையில் நூல் வெளியீட்டு விழா

**அன்புவழிபுரம், கந்தளாய் தினகரன் நிருபர்கள்**

திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழாவையொட்டி இக்கல்லூரியின் முன்னாள் அதிபரும் கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சருமான சி.தண்டாயுதபாணி எழுதிய 'வரலாறும் வளர்ச்சியும் 1897 – 2022' எனும் நூல் வெளியீடு இன்று (07) காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி கல்லூரியின் சம்பந்தர் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வானது 2001ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களின் அனுசரணையில் நடைபெறவுள்ளது.

## காரைதீவில் வர்த்தகர்கள் சங்கம் அங்குரார்ப்பணம்



**காரைதீவு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேசத்தில் முதன்முறையாக வர்த்தகர் சங்கமொன்று நேற்று (06) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முன்னிலையில் இதற்கான கூட்டம் கலாசார மண்டபத்தில் நடைபெற்றதுடன், இதில் காரைதீவிலுள்ள வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

இச்சங்கத்தின் தலைவராக முன்னாள் உதவித் தவிசாளர் க.தட்சணாமூர்த்தி, செயலாளராக கே.குகனேஸ்வரன், பொருளாளராக கே.மேகலா, உப தலைவராக ரி. துரைராஜா உப செயலாளராக பி.தசதரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

21 சிரேஷ்ட உறுப்பினர்களையும் 298 அங்கத்தவர்களையும் கொண்ட இச்சங்கம், காரைதீவில் 112 பிரிவுகளை உள்ளடக்கிய வர்த்தக சங்கமாகும்.

## 'ஸ்மார்ட் செயலகம்' இணையத்தள சேவையை பயன்படுத்தும் பயிற்சி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஸ்மார்ட் செயலகம் எனும் எண்ணக்கருவிலான இணையத்தள சேவையை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாக தெளிவுபடுத்தும் பயிற்சியொன்று நடத்தப்பட்டது.

அம்மாவட்ட செயலகத்தில் நேற்று (05) முன்தினம் நடத்தப்பட்ட இப்பயிற்சியின் போது இவ்வருடத்திலிருந்து ஸ்மார்ட் செயலகமூடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள இருப்புக் கணக்கெடுப்பு, கேட்போர்கூட முன்பதிவு, தபால் முகாமைத்துவ முறைமை ஆகியன தொடர்பாக மாவட்ட செயலகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினரால் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக நடவடிக்கைகளை கணக்கெடுக்கும் முறையூடாக அலுவலர்கள் தொடர்பான விடுமுறை, தினக்குறிப்பேடு, வேலை முன்நிகழ்ச்சித் திட்டம் போன்றவற்றை பின்பற்றுவது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரனினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஸ்மார்ட் செயலகம் எனும் எண்ணக்கரு பயிற்சியானது, மாவட்ட செயலகத்தின் உதவி அரசாங்க அதிபர் ஆறுமுகம் நவேஷ்வரன் தலைமையிலும் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் லக்சிகா தீசன் ஏற்பாட்டிலும் நடைபெற்றது.

## திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது விழா



**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

திருகோணமலை இ. கி. ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழாவையிட்டு நடைபவனியொன்று நேற்று (05) முன்தினம் நடைபெற்றது.

மேற்படி கல்லூரியிலிருந்து ஆரம்பமாகிய நடைபவனியின் போது, தமிழர் பண்பாட்டு விழுமியங்களைக் காட்சிப்படுத்தும் அம்சங்களும் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தும் சிறப்பு விருந்தினராக திருகோணமலை நகர சபைத் தலைவர் நா. இராசநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கின் குரல்



## பூநொச்சிமுனை துறைமுக காணியை கையகப்படுத்துவதற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பூநொச்சிமுனை மீன்பிடித் துறைமுகத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியை, மண்முனை வடக்கு பிரதேச செயலகம் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (06) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியொன்று இடம்பெற்றது.

பூநொச்சிமுனை ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற ஜும்மா தொழுகையின் பின்னர் அப்பள்ளிவாசலுக்கு முன்பாக ஒன்றுதிரண்ட பொதுமக்கள், சுலோகங்களையும் பதாதைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பேரணியாக பூநொச்சிமுனையிலுள்ள மேற்படி காணியை நோக்கிச் சென்று அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



பூநொச்சிமுனை மீனவர்களுக்காக கடந்த 2002ஆம் ஆண்டு மீன்பிடித் துறைமுகம் நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்ட இக்காணியை அடையாளப்படுத்துவதற்காக கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் மண்முனை வடக்கு பிரதேச செயலக அதிகாரிகளும் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி உத்தியோகத்தர்கள் சிலரும் முற்பட்ட போது, அவ்வேளையில் ஒன்று திரண்ட பூநொச்சிமுனயிலுள்ள மீனவர்கள், பொதுமக்களுக்கும் மேற்படி அதிகாரிகளுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது

இதையடுத்து இரு சாராரும் காத்தான்குடி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். இந்நிலையில், எதிர்வரும் 9ஆம் திகதி இரு சாராரும் காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே மேற்படி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவரும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான ரவூப் ஏ.மஜீத்திடம் மகஜரொன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

## வாழைச்சேனை பிரதான வீதி விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலி

**மண்டூர், புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தரொருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய மயில்வாகனம் ராயூக்காந்தி என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினமான நேற்று (05) முன்தினம் வழமை போன்று வீட்டிலிருந்து உணவகத் தொழிலுக்காக தனது தந்தையுடன் சைக்கிளில் இந்நபர் சென்று கொண்டிருந்த போது, மட்டக்களப்பு நோக்கிச் சென்ற வான் இவர்கள் மீது மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் காயமடைந்த இருவரும் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி மேற்படி நபர் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இவ்விபத்தை ஏற்படுத்திய வாகனம் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்ற நிலையில், சந்தேக நபரைக் கைது செய்வதற்காக ஏறாவூர் பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## சுவாமி ஜீவனானந்த சமூகப்பணி வாகரையில் அங்குரார்ப்பணம்



**காரைதீவு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரையில் மிகவும் பின்தங்கிய இடங்களான கொக்குவில், கிருமிச்சோடை, குஞ்சன்குளம் ஆகிய இடங்களில் பத்தம்சத் திட்டங்களுக்கான அடிப்படை அங்குரார்ப்பண நிகழ்வு, இராமகிருஷ்ணமிஷன் சுவாமி ஜீவனானந்த சமூக சேவைத் திட்டத்தின் கீழ் கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, மூன்று பாடசாலைகளில் அறநெறிப் பாடசாலைகள் புதிதாக தொடங்கி வைக்கப்பட்டன. மக்களுக்கான குடிநீர் வசதிக்காக மூன்றடிக் குழாய்கள் செப்பனிடப்பட்டு வழங்கப்பட்டன. ஒவ்வொரு கிழமையும் நடைபெறும் வகையில் 'வண்ணம்' நடமாடும் வைத்திய சேவையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்துடன், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி இடங்களிலுள்ள உயர் வகுப்பு மற்றும் கல்லூரிக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வசதிகள் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

சுயசார்பு வேலைவாய்ப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் 3 மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரை

**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் பார் வீதியில் அமைந்துள்ள வாகனம் திருத்துமிடமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 மோட்டார் சைக்கிள்கள் எரிவடைந்துள்ளன.

நேற்று (05) முன்தினம் ஏற்பட்ட இத்தீ விபத்துச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸில் மேற்படி வாகனம் திருத்துமிட உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது, திருத்துவதற்காக ஒப்படைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களே தீயில் எரிவடைந்துள்ளதாகவும் இந்நிலையில், வாகனம் திருத்துமிடத்திலிருந்த சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மின்னொழுக்குக் காரணமாக இத்தீ விபத்து ஏற்பட்டதா அல்லது தீ வைக்கப்பட்ட சம்பவமா எனும் கோணத்தில் விசாரணையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## கடலரிப்பால் சேதமடையும் மீனவர் சங்கம்



மூதூர் கொட்டியாரக்குடாக் கடலில் அடிக்கடி ஏற்பட்டு வரும் பாரிய கடலரிப்புக் காரணமாக மூதூர் கரையோரக் கிராமத்தில் அமைந்துள்ள மீனவர் சங்கக் கட்டடம் சேதமடைந்து வருவதை படத்தில் காணலாம். (படம்: மூதூர் தினகரன் நிருபர்)

## கிண்ணியாவில் நுளம்புகளை கட்டுப்படுத்த சிரமதானம்

**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பைசல் நகரிலும் மகறூப் கிராமத்திலுமுள்ள வீடுகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கிண்ணியா பொதுச் சுகாதாரப் பணிமனையினதும் கிண்ணியா பொது வைத்தியசாலையினதும் பங்களிப்புடனும் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். எம்.கனியின் தலைமையிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று (05) முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கிண்ணியாவில் டெங்கு நுளம்புகள் பெருகிக் காணப்படுவதைத் தொடர்ந்து, டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட அதிகளவானோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக, வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அக்கரைப்பற்று சமுர்த்தி உத்தியோகத்தர் ஒன்றியத்தின் ஆண்டு நிறைவு விழா



**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

அக்கரைப்பற்று சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒன்றியத்தின் பதினோராவது ஆண்டு நிறைவு விழாவும் குடும்ப ஒன்றுகூடலும் கடந்த புதுவருட தினத்தன்று ஓ.ரி. என்ட் பீச் ஹட் வளாகத்தில் நடைபெற்றது.

ஒன்றியத்தின் தலைவர் எம்.ஐ. நைசர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, ஓய்வுபெற்றுச் செல்லும் சமுர்த்தி உத்தியோகத்தர்களான ஜனாப் ஏ.எம். மபாயிஸ், ஏ.எல்.இரசாத் ஆகியோருக்கு வாழ்த்துப்பா வாசித்து பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர்கள் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

## காரைதீவு, அக்கரைப்பற்றில் திருவாதிரை தீர்த்தோற்சவம்

**காரைதீவு குறூப், வாச்சிக்குடா விசேட நிருபர்கள்**

இந்து மக்களினால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் திருவெம்பாவை விரதத்தின் இறுதி நாளான நேற்று (06) திருவாதிரைத் தீர்த்தோற்சவம், காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் கோயிலிலும் அக்கரைப்பற்று ஸ்ரீவம்மியடிப் பிள்ளையார் கோயிலிலும் நடைபெற்றன.

காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில், காரைதீவுப் பிரதேசத்தில் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சியுடன் திருவாதிரைத் தீர்த்தோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயிலிருந்து அலங்கரிக்கப்பட்ட தேரில் பார்வதி தேவி சகிதம் வலம் வந்த நடராஜப் பெருமான், காரைதீவு கடற்கரையில் தீர்த்தமாடினார்.



இதேவேளை, அக்கரைப்பற்று ஸ்ரீவம்மியடிப் பிள்ளையார் கோயிலிலும் திருவெம்பாவை விரதத்தையிட்டு விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. இத் திருவெம்பாவை பூஜை வழிபாடுகளில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## ஓசானம் நிலையத்தினால் நடமாடும் பற்சிகிச்சை

**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்**



மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பிரதேசத்திலுள்ள ஓசானம் நிலையத்தினால் நடமாடும் பற்சிகிச்சைக்கூடமொன்று, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி குணசிங்கம் சுகுணன் தலைமையில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஓசானம் நிலையத்திலுள்ள விசேட தேவையுடைய சிறார்களின் பற்சுகாதாரத்தை பரிசோதனை செய்து தேவையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் திட்டம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை அதிகாரிகளினால் இதன்போது வழங்கப்பட்டது. இச்சேவையூடாக ஒரு இலட்சத்து இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சேவை வழங்குவதுடன், பின்தங்கிய பிரதேசத்தில் பற்சிகிச்சை பெறமுடியாதுள்ள மக்களின் வாய்ச்சுகாதாரத்தை பரிசோதனை செய்து துரிதமாக சிகிச்சை வழங்குவதற்கு நவீன வசதிகளுடனான இந்நடமாடும் பற்சிகிச்சைக்கூடம் மிகவும் பயனுள்ளதாக அமையுமென, வைத்தியக் கலாநிதி கு.சுகுணன் தெரிவித்தார்.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைப்பு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

அகில இலங்கை ரீதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட தேசிய தொழில் திறன் தகைமை (NVQ) பரீட்சையில் சித்தியடைந்த மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நால்வருக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்கள தலைமைக் காரியாலயத்தில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் நேற்று (05) முன்தினம் இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமானது, இலங்கை தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடன் மேற்கொண்ட புரிந்துணர்வின் அடிப்படையில், மட்டக்களப்பில் A+தர உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நான்காம் மட்ட தேசிய தொழில் திறன் தகைமை பரீட்சை அண்மையில் நடத்தப்பட்டது.

## மருதமுனையில் மையவாடி அமைக்க காணி ஒதுக்கீடு



**பெரியநீலாவணை விசேட, மருதமுனை நிருபர்கள்**

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்து, மேட்டுவட்டை பகுதியில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் நீண்டகாலத் தேவையாக இருந்து வரும் மையவாடியை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் கல்முனை மாநகர சபையினால் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இம்மையவாடிக்காக ஒதுக்கப்பட்ட காணியை கல்முனை மாநகர சபையிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று (05) முன்தினம் நடைபெற்றது. இக்காணியை, கல்முனை மாநகர முதல்வர், சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப்பின் முன்னிலையில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி கையளித்தார்.

இக்காணியை மண்ணிட்டு நிரப்பும் ஆரம்பக்கட்டப் பணிக்கு 3 இலட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்வதற்கு வர்த்தகப் பிரமுகரொருவர் முன்வந்துள்ளார்.




### சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வுக்காக

# அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும்



**வடக்கில் 2ஆவது நாளாக கவனயீர்ப்பு போராட்டம்**




**மாங்குளம், மன்னார் குறூப், யாழ். விசேட, புதுக்குடியிருப்பு விசேட, சாவகச்சேரி விஷேட நிருபர்**

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெறமுடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டுமென வலியுறுத்தி இரண்டாவது நாளாகவும் நேற்று வடக்கில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் வடக்கில் பல்வேறு பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். மல்லாவி பஸ் நிலையம், நாவற்குழி, வவுனியா தரணிக்குளம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபம், மன்னார் போன்ற இடங்களில் இரண்டாவது நாளாகவும் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் 'வடகிழக்கு மாகாணங்கள் மீள ஒன்றாக்கப்பட்டு ,வடகிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும்""அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும் " "இணைந்த வடகிழக்கு மாகாணத்துக்கு மத்திய அரசால் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும் "போன்ற பதாகைகளை தாங்கிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இப்போராட்டமானது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் நேற்றுமுன்தினம் முதல் தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மார்கழி திருவாதிரை உற்சவம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. காலை 6.45 வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக உள்வீதி வலம் வந்ததைத் தொடர்ந்து காலை 7.30 மணிக்கு வெளி வீதியில் எழுந்தருளினார். படம் யாழ். விசேட நிருபர்

## வவுனியாவில் ஐ.ம.ச உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் அறிமுகம்



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா மூன்று முறிப்பில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட அமைப்பாளர் ச. நிரேஷ்குமார் தலைமையில் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிழ்வில் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன, தேசிய அமைப்பாளர் உமாசந்திரப்பிரகாஸ், வவுனியா அமைப்பாளர் பிரியதர்சினி ரசிக்கா, முன்னாள் மாவட்ட அமைப்பாளர் கருணதாசா, அமைப்பின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## அரியாலையில் கைக்குண்டு மீட்பு



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. அரியாலை குசவம்பலம் வீதியில் கைக்குண்டு ஒன்று காணப்படுவதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பொலிஸார் நீதிமன்ற உத்தரவை பெற்று, பொலிஸ் விசேட அதிரடி படையினரின் குண்டு செயல் இழக்க செய்யும் படையணியின் உதவியுடன் செம்மணி பகுதியில் கைக்குண்டை செயலிழக்க செய்துள்ளனர்.

## சடலம் மீட்பு

**யாழ்.குறூப் நிருபர்**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணற்காடு பகுதியில் வீட்டில் தனிமையில் வசித்து வந்த குடும்பஸ்தர் சடலமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளார்.

மணற்காடு பழைய தேவாலயத்திற்கு பின்புறமாக உள்ள வீட்டில் வசித்து வந்த கந்தசாமி பன்னீர்ச்செல்வம் (வயது 56) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. இதனையடுத்து கிராம சேவையாளருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து , அவரும் அயலவர்களும் இணைந்து வீட்டைத் திறந்து பார்த்த போது சமையலறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

அதுதொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

உயிரிழந்தவரின் மனைவி ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தமையால், தனியாகவே வாழ்ந்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு





**(மன்னார் குறூப் நிருபர்)**

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தும், உயிரிழந்த மக்களின் உடல்களை மீட்டு அடக்கம் செய்யவும்,பல்வேறு மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வந்த மன்னார் வங்காலை புனித ஆனாள் ஆலய பங்குத்தந்தை அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

மேலும் அவருடன் பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் மன்னார் வங்காலையில் நேற்று படுகொலை செய்யப்பட்ட அமரர்.அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 38 ஆம் ஆண்டு நினைவு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் நினைவு கூறப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை (6) காலை இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதன்போது படுகொலை செய்யப்பட்ட அமரர். அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். அருட்தந்தையுடன் சேர்ந்து இன்னுயிர் நீத்த உறவுகளுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைதொடர்ந்து வங்காலை பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலன் அடிகளாரின் தலைமையுரையில் அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் குருத்துவ சமூகப்பணி வாழ்வு குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் சேர்ந்து உயிர் நீத்தவர்களின் 38ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணம் – நல்லூர் சிவன் கோவில் தேர்த்திருவிழா நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. (படம் யாழ்.விசேட நிருபர்)

## அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்

**வவுனியா விசேட நிருபர்**

தமிழ், சிங்களம், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தால் வீழ்த்தப்பட்ட நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார்.

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகமொன்றினை (06.01) திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியை சஜித் பிரேமதாசாவுடன் இணைந்து முழுப்பலத்தையும் காண்பித்து கொண்டிருக்கின்றோம். சஜித் பிரேமதாசா இந்த நாட்டின் அடிமட்டத்திலிருந்து செயற்பட்டு கொண்டிருகின்றார். அதனால் உங்களது கிராமங்களிலுள்ள சக்தியை எங்களுடைய ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்குங்கள்.



இக்கிராமங்களையும் கிராமங்களிலுள்ள வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்ல ஒரே வளம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் தான் உள்ளது. நகரசபை, மாநகர சபை, மாகாணசபை தேர்தலின் போது அதனைப் பெற்றுக் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் ஒரு கொள்கையுடனேயே ஐக்கிய மக்கள் சக்தியாக இங்கு வந்துள்ளோம்.

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி எமது நாடு சுதந்திரமடைந்து 75 வருடங்களாகின்றது. இந்த 75 ஆண்டுகளாக அரசாங்கம் செய்த நல்ல காரியங்களும் இருக்கின்றன. கூடாத காரியங்களும் இருக்கின்றன. கூடாத காரியமாக நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து போயுள்ளது.

இங்கு முப்பது வருட காலம் யுத்தம் இடம்பெற்றுள்ளது. இந்த மண்ணில் இரத்தங்கள் சிந்தப்பட்டுள்ளன. 75 வருடங்களாக செய்ய வேண்டியவற்றை செய்யாத காரணத்தினாலேயே இங்கு யுத்தமொன்று இடம்பெற்றது. தற்போது எமக்குத் தேவை தமிழ், சிங்களம், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தால் வீழ்த்தப்பட்ட நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒட்டுசுட்டானில் கொள்ளை சம்பவங்களால் மக்கள் அச்சம்

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீடுகளில் தனிமையிலிருக்கும் வயோதிபர்களின் வீடுகளை இலக்கு வைத்து கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வயோதிபர்களிடம் கொள்ளையர்கள் பெறுமதியான நகைகள் பணங்களை கொள்ளையடித்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் சிவநகர் பகுதியில் தனிமையில் இருந்த வயோதிபரை கட்டிவைத்து வீட்டிலிருந்த பெறுமதியான தங்கநகைகள், பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இந்நிலையில் கடந்த 03.01.2023 அன்று இரவும் ஒட்டுசுட்டான் நகரை அண்டிய பகுதியில் தனிமையில் வசித்து வந்த வயோதிப தம்பதிகளின் வீட்டில் புகுந்த கொள்ளையர்கள் கணவன், மனைவி இருவரையும் தாக்கி விட்டு வீட்டிலிருந்த 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் மனைவியின் தோடு உள்ளிட்ட 5 பவுண் நகை என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர். இதன்போது கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்கான வயோதிபரான செல்லப்பா அழகையா என்பவர் மீது மண்வெட்டி பிடியால் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதில் காயங்களுக்குள்ளான அவர் ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.




# சிவனொளிபாதமலை இரத்தினபுரி பாதையில் சுற்றாடல் மாசு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



சிவனொளிபாதமலை யாத்திரிகர்களின் பிரதான மார்க்கமாகக் காணப்படும் இரத்தினபுரி பலாங்கொடை குருவிட ஊடான பாதைகளின் இருபகுதிகள் உட்பட சுற்றுப்பிரதேசங்களின் சுற்றாடல் பரந்தளவில் பாதிக்கப்பட்டு வருவதாக சுற்றாடலியலாளர்கள் உட்பட பொதுமக்கள் முறையிடுகின்றனர்.

யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்கு யாத்திரை ஏற்பாட்டு குழுவினர் ஊடகங்கள் மற்றும் ஏனைய வழிகள் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கி வருகின்ற போதிலும் இவ்விடயங்களில் சில யாத்திரிகர்கள் அலட்சியமாக நடந்து கொள்வதால் வீதிகளின் சுற்றாடல் இவ்வாறு பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் புனித நோக்கத்துடன் யாத்திரைகளை மேற்கொள்ளும் பக்தர்களுக்குப் பெரும் தடங்கல்கள் ஏற்பட்டு வருவதாகவும் பாதிக்கப்படுவோர் சார்பிலும் சுற்றாடலியலாளர்களும் முறையிடுகின்றனர்.

குறிப்பாக இவ்வீதிகளின் இரு ஓரங்களிலும் வீசப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொலித்தீன் வகைகளும் ஏனைய சில கழிவு பொருட்களும் அழுகிச் சிதைவடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்வதில் ஏற்பாட்டுக் குழுக்கள் மாத்திரமன்றி ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதியின் மூன்று வீதிகளிலும் பயணிப்போர் அநாவசியமான மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்வதுடன் கழிவுப் பொருட்களை இப்பகுதியில் வீசிவிட்டுச் செல்வதை தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு ஸ்ரீதலதா மாளிகையில் ஜனரஜ பெரஹரா

எம்.ஏ.அமீனுல்லா

இலங்கையின் 75ஆவது சுதந்திர விழாவுடன் இணைந்ததாக எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதி குடியரசு வீதி உலாவொன்றினை (ஜனரஜ பெரஹரா) நடாத்த ஸ்ரீ தலதா மாளிகை நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இதற்கான பூர்வாங்க கலந்துரையாடல் அண்மையில் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் இடம்பெற்றது.

மேலும் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க மிகவும் சிறப்பு வாய்ந்த விசேட சந்தர்ப்பங்களில், இவ்வாறு குடியரசு வீதி ஊர்வலங்கள் பல சந்தர்ப்பங்களில் தலதா மாளிகையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேலா தெரிவித்தார்.

இந்த அணிவகுப்பில், குடியரசு கொடி யானைகளுடன் ஊர்வலமாக பல தெருக்களில் கொண்டு செல்லப்படுகிறது.

## தெருநாய்களுக்கு உணவளிக்கும் கேகாலை நகர இளைஞர்கள்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

தெருக்களில் அலைந்து திரியும் தெரு நாய்களின் பசியை போக்க அவற்றுக்கு இலவசமாக உணவு வழங்கும் புண்ணிய கருமத்தில் கேகாலையை சேர்ந்த சில இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

பசிக்கு உணவு கிடைக்காமையால் கேகாலை நகரின் பல இடங்களிலும் உணவுக்காக அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்களின் பசியைப் போக்கும் நற்காரியத்தை இந்த இளைஞர் குழுவினர் கடந்த ஒரு மாத காலமாக நடத்தி வருகின்றனர்.

## உழவு இயந்திர பெட்டி கழன்று விபத்து; நால்வர் படுகாயம்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியில் கிரிமிட்டி பிரதேசத்தில் உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

நானுஓயா கொல்சி தோட்டத்திலிருந்து மட்டுக்கலை தோட்டத்திலுள்ள தேயிலை தொழிற்சாலைக்கு கொழுந்து ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தின் கொக்கி கழன்று அதன் பெட்டி தலைகீழாக வீழ்ந்ததாகவும் இதனைத்தொடர்ந்து அதில் பயணித்த நால்வரும் அதிலிருந்து தூக்கி வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



இதில் காயமடைந்தவர்கள் நுவரெலியா மாவட்ட பொது ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர், இதில் படுகாயமடைந்த ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன. இவ்விபத்து தொடர்பில் நானுஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

டி.சந்ரு

# இலங்கை வானொலி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாற்றப்பட்டு 56 வருடங்கள் பூர்த்தி





எம்.ஏ.அமீனுல்லா

இலங்கை வானொலி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டு கடந்த வியாழக்கிழமையுடன் (5) 56 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதை முன்னிட்டு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகமும், பிராந்திய சேவைகளும் சர்வ மத பிரார்த்தனைகளை ஒழுங்கு செய்திருந்தன. கண்டி மலையக சேவை, முறையே கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் ,கண்டி பெரிய பள்ளிவாசல் மற்றும் கண்டி புனித அந்தோனியார் தேவாலயம் ஆகிய சர்வ மத ஸ்தானங்களில் பிரார்த்தனை நிகழ்ச்சிகளை நடத்தியது.

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய குருக்கள் சமயச் செல்வர் லக்ஷ்மீ சர்மா தலைமையில் பிரார்த்தனைகள் இடம்பெற்றன. மிகவும் சிறப்பான வரலாற்றைக் கொண்ட இலங்கை வானொலி மென்மேலும் பரந்த அளவில் சேவையாற்ற இறைவாசியை வேண்டி நிற்பதாக அவர் தெரிவித்தார்.

கண்டி தக்கியா பெரிய பள்ளிவாசலில் துஆ பிரார்த்தனைகளுக்கு தலைமை தாங்கிய மௌலவி பஸ்லுர் ரஹ்மான், சகல மதக்குழுவினருக்கும் சமவாய்ப்பு அளித்து, இலங்கை வானொலி ஆற்றும் சேவைகள் தொடர வேண்டும் என்றார்.

கண்டி புனித அந்தோனியார் தேவாலயத்தின் தலைமை மதகுரு வணக்கத்திற்குரிய பிதா ஏற்றனாம் நேரியோ அடிகளார் தமது பிரார்த்தனையில், தற்போதைய இக்கட்டான காலகட்டத்தில் தேசிய வானொலியின் சேவை முன்னெடுப்பது அவசியமாகின்றது என தெரிவித்தார்.

# கல்வி புரட்சி மூலம் மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவேன்

## ஸ்ரீ.சு.கட்சி தொகுதி அமைப்பாளர் ச. திருமுருகன்

ஹற்றன் சுழற்சி நிருபர்

கல்வி புரட்சி மூலம் மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவேன். அதற்கான ஓர் பாலமாக அரசியலைப் பயன்படுத்துவேன். எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் எனது பிரதிநிதிகளை நிறுத்துவேன்." என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளரும், விஷ்ணு ஆரோஹனம் அமைப்பின் தலைவருமான ச. திருமுருகன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (06.01.2023) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"2017ஆம் ஆண்டில் விஷ்ணு ஆரோஹனம் எனும் அமைப்பை ஆரம்பித்தேன். அதன் ஊடாக மலையகத்தில் கல்வி திட்டங்கள் மற்றும் சத்துணவு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் எனது சேவையை பாராட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எனக்கு சுதந்திரக்கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பதவியை வழங்கினார். தற்போது தொகுதி அமைப்பாளராக செயற்பட்டுவருகின்றேன்.

மலையக மக்களுக்கான எனது சேவைகளை, வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரசியலும் ஒரு பாலமாக அமையும் என்பதால் பதவியை ஏற்று செயற்பட்டுவருகின்றேன். எதிர்காலத்தில் அரசியலிலும் வென்று, மக்கள் சேவையை தொடர்வேன்.



அதேவேளை, உள்ளூராட்சிமன்ற தேர்தலில் நான் போட்டியிடமாட்டேன். எமது கட்சியின் சார்பில் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள். மாகாணசபைத் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டால் அதில் போட்டியிடுவது சம்பந்தமாக எனது நிலைப்பாட்டை அறிவிக்கப்படும்.

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீண்டகால வேலைத்திட்டங்கள் உள்ளன. அவை தொடர்பில் விரிவான கலந்துரையாடல்களும் அவசியம். எனினும், கல்வி மேம்பாட்டுமூலம் விரைவில் மாற்றத்தை நோக்கி பயணிக்கலாம். அதனையே தற்போது நான் செய்துவருகின்றேன்." என்றார்.

# தனமல்வில கல்வி வலய மாணவர்களுக்கு இலவச காலையுணவு இடைநிறுத்தம்; பெற்றோர் கவலை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

தனமல்வில கல்வி வலய மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச காலையுணவு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர். சத்துணவுத் திட்டத்தை பொறுப்பேற்று நடத்தும் உணவு விநியோகஸ்தர்களுக்கு கடந்த கால உணவு விநியோகத்துக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக உணவு விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்கான கடந்த ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாமையால் பெரும் நஷ்டத்தை தாம் எதிர்கொண்டுள்ளதாகவும் இவர்கள் முறைப்பாடுகின்றனர். ஒரு முட்டை 60 ரூபாவுக்கும் அதிக விலையில் விற்கப்படுகின்றது. ஒரு வேளை உணவுக்காக கிடைக்கும் 60 ரூபாவினால் தமக்கு காலை ஆகாரத்தை வழங்க முடியாது எனவும் இவர்கள் முறையிடுகின்றனர்.அத்துடன் தற்போதைய உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகமாக உள்ளமையால் தாம் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.





தேசிய நல்லிணக்கத்தின் தைப்பொங்கல் விழா ஊவா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று வெகுவிமரிசையாக இடம்பெற்றது. பல்கலைக்கழகசமூகம் மற்றும் சிவில் சமூக ஒன்றிணைப்பில் இடம்பெற்ற இவ்விழாவில் சமயநிகழ்வுகள்,கலாசார நிகழ்வுகள் இடம்பெறுவதை படங்களில் காணலாம். படம்: பதுளை தினகரன் விசேட நிருபர் நல்லிணக்கத்தின்



அக்கரப்பத்தனை பிரஸ்டன் தமிழ் வித்தியாலய பாடசாலைக்கு நுவரெலியா கல்வி வலய கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.கிருபாகரனின் வழிகாட்டலுக்கமைய சமூக செயற்பாட்டாளர் தேசமானி தேசபந்து சந்திரகுமாரின் நிதி அனுசரணையில் மின் இணைப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர் தேசமானி தேசபந்து சந்திரகுமார்,பாடசாலை அதிபர் பரமேஸ்வரன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

படம்: தலவாக்கலை குறூப் நிருபர்

# நுவரெலியாவில் ஆடற்கலை போட்டி



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசியமட்ட நடனப் போட்டியின், நுவரெலியா மாவட்ட அறநெறி பாடசாலைகளுக்கிடையேயான ஆடற்கலை தேர்வு போட்டி பாரதி அறக்கட்டளை மற்றும் சுயசக்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொட்டகலை ஹட்டன் ஹில்ஸ் கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது.

# சர்வதேச செய்திகள்

## அமெரிக்காவில் சபாநாயகரை தேர்வு செய்வதில் 3ஆவது நாளாக இழுபறி

### கெவின் மக்கார்த்தி 11 வாக்கெடுப்புகளிலும் தோல்வி

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் கெவின் மக்கார்த்தி வெற்றிபெற முடியாத நிலையில் பெரும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

சபாநாயகரை தேர்வு செய்வதற்காக கடந்த வியாழனன்று மூன்றாவது நாளாக இடம்பெற்ற வாக்கெடுப்பில் மக்கார்த்தியின் சொந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவருக்கு தொடர்ந்து எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். இதனால் அவர் 11 வாக்கெடுப்புகளில் தோல்வியை சந்தித்துள்ளார்.

கடந்த நவம்பரில் இடம்பெற்ற இடைக்கால தேர்தலில் குடியரசுக் கட்சி பெரும்பான்மை பெற்ற நிலையிலேயே அந்தக் கட்சி சபாநாயகர் பதவியை ஏற்கவுள்ளது. எனினும் புதிய சபாநாயகர் ஒருவர் தேர்வு செய்யப்படாத நிலையில் தேர்வான புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்வது மற்றும் சட்டமூலங்களை நிறைவேற்ற



முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

1860 இல் ஐக்கிய அமெரிக்கா ஒன்றியமாக இருந்தபோதும் அடிமைப் பிரச்சினைக்கு மத்தியில் சபாநாயகர் ஒருவரை தேர்வு செய்ய கொங்கிரஸ் 44 முறை வாக்கெடுப்பு நடத்த வேண்டி ஏற்பட்டது. அதன்பின் பெரும் இழுபறி சூழல் தற்போதே ஏற்பட்டுள்ளது.

மக்கார்த்தி சபாநாயகர் ஆவதற்கு 218 வாக்குகள் தேவைப்படும் நிலையில் குடியரசு கட்சியில் உள்ள கடும்போக்கு நிலைப்பாடுடைய 20 உறுப்பினர்கள் மக்காத்திக்கு ஆதரவு அளிக்க மறுத்து வருகின்றனர்.

மக்கார்த்தி முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஆதரவாளர் என்றபோதும் அவரது பழமைவாத நம்பிக்கைகள் மீது இந்தத் தீவிர வலதுசாரி கிளர்ச்சிக் குழு சந்தேகம் வெளியிட்டு வருகிறது.

மக்கார்த்தி மீது நம்பிக்கை இல்லை என்று இந்த எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்த தெற்கு கலிபோர்னியா பிரதிநிதியான ரல்ப் நோர்மன் தெரிவித்துள்ளார்.

எனினும் ஆட்சியில் உள்ள ஜனநாயகக் கட்சியினர் பிரதிநிதிகள் சபையில் தனது தலைவராக முதல் முறை கறுப்பினத்தவரான ஹகீம் ஜெப்ரியை தேர்வு செய்துள்ளது.

நவம்பர் தேர்தலில் 435 இடங்கள் கொண்ட பிரதிநிதிகள் அவையில் குடியரசு கட்சியினர் 222 இடங்களை வென்று பெரும்பான்மையை பெற்றது. எனினும் ஜனநாயகக் கட்சியினர் செனட்டில் தனது பெரும்பான்மையை தக்க வைத்துக்கொண்டனர்.

பாதுகாப்புச் சபையில்

## இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரதிநிதிகள் வாக்குவாதம்






ஜெரூசலம் அல் அக்சா பள்ளிவாசல் வளாகத்திற்குள் இஸ்ரேலிய அமைச்சர் நுழைந்தது குறித்து பாதுகாப்புச் சபையில் வியாழக்கிழமை இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரதிநிதிகள் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இது தொடர்பிலான பாதுகாப்புச் சபை அமர்வு அபத்தமானது என்று இஸ்ரேலிய தூதுவர் கிளார்ட் ஏர்டன் குறிப்பிட, யூத நாடு அவமதிப்புச் செய்கிறது என்று பலஸ்தீன தூதுவர் சாடினார். ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சீனாவின் கோரிக்கை ஒன்றை அடுத்தே நியூயோர்க்கில் உள்ள பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலிய அமைச்சரின் பயணம் பற்றி விவாதிக்கப்பட்டது.

எனினும் இந்தக் கூட்டம் நடத்துவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று இஸ்ரேலிய தூதுவர் கூட்டத்திற்கு முன்னதாகக் குறிப்பிட்டார். “ஒன்றும் நடக்காததற்கு பாதுகாப்புச் சபை கூட்டம் நடத்தப்படுவது அபத்தமானது” என்று அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலின் புதிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் இட்மார் பென் கிவில் கடந்த செவ்வாயன்று அல் அக்சா பள்ளிவாசல் வளாகத்திற்குள் நுழைந்தது தொடர்பில் அமெரிக்கா உட்பட பல தரப்புகளும் கண்டனம் வெளியிட்டிருந்தன.

இஸ்ரேல் தனது ஆட்புலத்திற்குள் இணைத்திருக்கும் கிழக்கு ஜெரூசலத்தில் இருக்கும் அல் அக்சா பள்ளிவாசல் முஸ்லிம்களின் மூன்றாவது புனிதத் தலமாகும். எனினும் இந்த வளாகம் யூதர்களினதும் புனித இடமாக உள்ளது. அல் அக்சா பள்ளிசாசல் வளாகத்திற்குள் முஸ்லிம் அல்லாதோர் குறிப்பிட்ட நேரத்தில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டபோதும் அவர்கள் பிரார்த்தனையில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் பலஸ்தீனர்களுக்கு எதிரான முழுமையாக அவமதிக்கும் செயலில் ஈடுபடுகிறது என்று ஐ.நாவுக்கான பலஸ்தீன தூதுவர் ரியாத் மன்சூர் பாதுகாப்புச் சபையில் தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கு எதிராக உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

“பாதுகாப்புச் சபை போதும் என்று கூறுவதற்கு இஸ்ரேல் எந்த சிவப்புக் கோட்டை தாண்ட வேண்டும்” என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

“வரலாற்று நிலையை மீறும் அனைத்து தன்னிச்சையான செயற்பாடுகளையும் அமெரிக்கா கண்டிப்பதோடு அதனை ஏற்க முடியாது” என்று அமெரிக்க இராஜதந்திரி ரொபர்ட் வூட் பாதுகாப்புச் சபையில் தெரிவித்தார்.

அமைதியை நிலைநாட்டவும் மேலும் உயிர்கள் பறிபோவதை தடுக்கவும், இரு நாட்டுத் தீர்வுத் திட்டத்தை காக்கவும் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் இரு தரப்பும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி நாம் வலியுறுத்துகிறோம்” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரச்சினை குறித்து ஐ.நா பாதுகாப்புச் சபை கடந்த பல ஆண்டுகளில் பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. மத்திய கிழக்கு அமைதித் தீர்வுக்கு இரு நாட்டு திட்டத்திற்கு பாதுகாப்புச் சபை ஆதரவு வழங்குகிறது.

பாதுகாப்புச் சபை இரண்டு மணி நேரம் கூடிய நிலையில் பலஸ்தீன தூதுவர் தனது திருப்தியை வெளியிட்டிருந்தார். (அல் அக்சா வளாகத்தின்) அந்தஸ்த்தை (பாதுகாப்புச் சபை) ஒருமித்து ஏற்றது” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சீன பயணிகளிடம் கொவிட் சோதனை



சீனா, ஹொங்கொங் மற்றும் மக்கௌவில் இருந்து அமெரிக்கா வரும் அனைத்து பயணிகளும் கொவிட்–19 தொற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கை சீனாவில் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டுள்ள ஆராய்ச்சி நிறுவனங்கள் கொவிட் தொற்று காரணமாக சீனாவில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாரம் நடுப்பகுதியில் சீனாவிலிருந்து மிலான் நகருக்கு வந்த இரண்டு விமானங்களில் பயணித்தவர்களில் சுமார் பாதிப் பேர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி இருந்ததாக இத்தாலிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## ரஷ்யா போர் நிறுத்தம்: நிராகரித்தது உக்ரைன்

உக்ரைனில் 36 மணி நேர போர் நிறுத்தத்திற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உத்தரவிட்டபோதும் உக்ரைன் அதனை நிராகரித்துள்ளது.

ரஷ்யாவில் பழைமைவாத கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை ஒட்டி வெள்ளிக்கிழமை தொடக்கம் போர் நிறுத்தம் ஒன்றை கடைப்பிடிக்க பாதுகாப்பு அமைச்சுக்கு புட்டின் உத்தரவிட்டிருந்தார். எனினும் அந்தக் கோரிக்கையை உக்ரைன் உடன் மறுத்துள்ளது.

தனது நாடு இராணுவ ரீதியில் முன்னேறுவதை தடுக்கும் முயற்சியாகவே இந்த போர் நிறுத்தம் உள்ளது என்று உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய பழைமைவாத திருச்சபையின் தலைமையிடம் இருந்து வந்த கோரிக்கைக்கு செவிசாய்த்து போரை நிறுத்துவதற்கு தமது தரப்புகளுக்கு ஜனாதிபதி புட்டின் உத்தரவிட்டதாக ரஷ்ய அரசு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஜூலியன் நாட்காட்டிக்கு அமைய ரஷ்ய பழைமைவாத கிறிஸ்தவர்கள் இன்று ஜனவரி 7ஆம் திகதியே கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

மோதல் இடம்பெறும் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான



பழைமைவாத கிறிஸ்தவ குடிமக்கள் இருக்கும் நிலையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்கு முந்திய தினம் மற்றும் கிறிஸ்மஸ் தினத்தில் போர் நிறுத்தத்தை பரிசீலனை செய்யும்படி புட்டினின் உத்தரவில் உக்ரைனை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் கடந்த வியாழன் இரவு வீடியோ ஒன்றில் தோன்றி உரையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி, கிழக்கு டன்பாஸ் பிராந்தியத்தில் உக்ரைன் முன்னேறுவதை நிறுத்தவும் அங்கு மேலும் ஆயுதங்கள் மற்றும் துருப்புகளை குவிக்கவும் போர் நிறுத்தத்தை பயன்படுத்த ரஷ்யா திட்டமிடுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய கட்டுப்பாட்டில் இருக்கும் மகீவ்கா நகரில் உக்ரைனிய தாக்குதலில் பெரும் எண்ணிக்கையிலான ரஷ்ய துருப்புகள் கொல்லப்பட்டு சில நாட்களிலேயே ரஷ்யா இந்தப் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது. இதில் 89 ரஷ்ய துருப்புகள் கொல்லப்பட்டதாக ரஷ்யா குறிப்பிட்டது.

உக்ரைன் போர் ஆரம்பித்தது தொடக்கம் அதிக துருப்புகள் கொல்லப்பட்டதாக ரஷ்யா ஒப்புக்கொண்ட சம்பவமாக இது உள்ளது.

புத்தாண்டு அரம்பித்து சில நிமிடங்களில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் 400 ரஷ்யத் துருப்புகள் வரை கொல்லப்பட்டதாக உக்ரைன் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 40 ஆண்டு சிறை இருந்த பலஸ்தீன கைதி விடுதலை



இஸ்ரேலிய சிறையில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த பலஸ்தீன கைதி 40 ஆண்டுகளின் பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்று பகுதியில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அவி ப்ரோபர்க் என்ற இஸ்ரேலிய இராணுவ வீரரை கடத்திக் கொன்றதாக கரீம் யூனிஸ் என்ற அந்தக் கைதி 1983 ஆம் ஆண்டு குற்றங்காணப்பட்டார்.

அரசியல் செயற்பாடுகள் மற்றும் இஸ்ரேலுடன் உடன்படிக்கைக்கான அழைப்பு என அவர் சிறையில் முக்கியமான கைதியாக இருந்து வந்தார்.

யூனிஸ் இஸ்ரேலிய குடியுரிமையை வைத்திருந்த நிலையில் இஸ்ரேலிய உள்துறை அமைச்சு அதனை நீக்கும்படி கேட்டுள்ளது.

இஸ்ரேலிய மத்திய நகரான ரானாவில் கடந்த வியாழக்கிழமை சூரியோதயத்திற்கு முன் யூனிஸ் விடுதலை செய்யப்பட்டதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடர்ந்து வடக்கு இஸ்ரேலில் இருக்கும் அவரது சொந்த ஊரான ஆராவில் அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அவருக்கு வரவேற்பு அளித்தனர்.

## போதைக் கடத்தல் மன்னனின் மகன் பிடிபட்டதால் மெக்சிகோவில் கலவரம்

மெக்சிகோவின் பிரபல போதைப்பொருள் கடத்தல் மன்னன் எல் சபோவின் மகன் கைது செய்யப்பட்டதை அடுத்து சினாலோ மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மோதலில் மூன்று பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

தனது தந்தையின் போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்குத் தலைவராக செயற்படுவதாகக் குற்றம்சாட்டப்படும் ஒவிடியோ குஸ்மான் லோபஸ், குலிகான் நகரில் வைத்து பிடிபட்ட நிலையில் மெக்சிகோ சிட்டிக்கு அழைத்துவரப்பட்டுள்ளார்.



கோபமடைந்த கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் வீதித் தடைகளை ஏற்படுத்தி, வாகனங்களுக்கு தீ வைத்ததோடு உள்ளூர் விமான நிலையம் ஒன்றையும் தாக்கியுள்ளனர். புறப்படுவதற்கு தயாரான இரு விமானங்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உள்ளன. 100க்கும் அதிகமான விமானப் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த மோதல்களில் 8 பேர் வரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக அந்த மாநில ஆளுநர் தெரிவித்துள்ளார்.

எலி என்ற புனைப்பெயரில் அழைக்கப்படும் குஸ்மான் லோபஸ், உலகின் மிகப் பெரிய போதைக்கடத்தல் கும்பலின் தலைவராக தற்போது செயற்பட்டு வருவதாக மெக்சிகோ பாதுகாப்பு அமைச்சர் லுயிஸ் கிரசன்சியோ தெரிவித்துள்ளார்.

அவரது தந்தையான எல் சபோ போதைக் கடத்தல் மற்றும் பண மோசடிக் குற்றச்சாட்டுகளில் 2019 ஆம் ஆண்டு குற்றங்காணப்பட்ட நிலையில் அமெரிக்காவில் ஆயுள் தண்டனையை அனுபவித்து வருகிறார். அவரது வழக்கு விசாரணையில் மெக்சிகோ போதைக் கடத்தல் கும்பல்களின் செயற்பாடுகள் பற்றி கொடூரமான விபரங்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

அமெரிக்க அதிகாரிகளின் உதவியோடு ஆறு மாத கண்காணிப்பு நடவடிக்கையின் பின்னர் குஸ்மான் லோபஸ் பிடிபட்டதாக பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவால் முன்னெடுக்கப்படும்

# மாணவர் ஆட்சேர்ப்பு தளம் இலங்கையிலும் அறிமுகம்

மாணவர்கள் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் பிராந்தியங்கள் மத்தியில், மிக வேகமாக வளர்ந்து வரும் சந்தைகளில் இலங்கையும் ஒன்றாகும். வலுவான பொருளாதார வளர்ச்சி மற்றும் பல்கலைக்கழக கற்கை வயதுடையவர்களின் கணிசமான எண்ணிக்கை ஆகியவை தேசத்தில் வெளிநாட்டில் கற்பதற்கான தேவையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளாகும்.

வளர்ந்து வரும் சந்தையின் பரிமாணத்தைக் கருத்தில் கொண்டு, *Infinite Group* ஆனது இலங்கையில் செயற்கை நுண்ணறிவால் முன்னெடுக்கப்படும் உலகளாவிய மாணவர் ஆட்சேர்ப்பு தளத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது, இது "வெளிநாட்டில் கல்வி கற்கும் தமது கனவை நனவாக்கிக் கொள்ள விரும்புகின்ற" மாணவர்களுக்கு உதவியாக அமையும்.


*Infinite Group* இன் பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு கௌரவ் பாத்ரா அவர்கள் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "தரத்தின் புதிய வரையறைகளை ஊக்குவிப்பதற்காக இலங்கையிலுள்ள உலகளாவிய ஆட்சேர்ப்புப் பங்காளர்களை ஒரே தளத்தில் ஒருங்கிணைக்க உதவ நாம் ஆவலாக உள்ளோம். வெளிநாட்டு கல்வித்து




# 33ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்தும் நவலோக்க மருத்துவமனைக் குழுமம்

இலங்கையின் தனியார் வைத்தியசாலைத் துறையில் முன்னோடி வர்த்தக நாமமான நவலோக்க மருத்துவமனைக் குழுமம் தனது 33ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தை டிசம்பர் 30ஆம் திகதி வெற்றிகரமாக நடத்தியது.

இந்தப் பொதுக் கூட்டமானது கொழும்பு பங்குச் சந்தையின் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைய ஆன்லைனில் நடத்தப்பட்டது.



நவலோகா மருத்துவமனைக் குழுமத்தின் 33வது பொதுக் கூட்டத்திற்கு நவலோக ஹாஸ்பிடல்ஸ் பிஎல்சியின் அனைத்து நிர்வாகக் குழு உறுப்பினர்களும் பங்குபற்றி இருந்ததுடன், தற்போது நிலவும் பொருளாதார சவால்களுக்கு மத்தியில், நவலோக மருத்துவமனை குழுமம் கடந்த வருடத்தின் கடைசி சில மாதங்களில் நேர்மறையான வளர்ச்சியை நோக்கி நகர்ந்தது இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனியார் மருத்துவமனைகள் துறையில் முன்னோடியாகத் திகழும் நவலோக்க மருத்துவமனைக் குழுமம், கடந்த 37 ஆண்டுகளாக தனியார் மருத்துவமனைத் துறையில் தனது தலைமைப் பதவியைத் தக்கவைத்து வருவதுடன், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள நோயாளிகளுக்கு குறைந்த விலையில் அதன் சிறந்த சேவை மூலம் சர்வதேச தரம் வாய்ந்த மருத்துவமனை சேவையை வழங்க முடிந்துள்ளது.

நோயாளிகள் மீது கவனம் செலுத்தி மருத்துவமனை சேவைகளை பேணுவதன் மூலம், மிகவும் சவாலான காலகட்டத்திலும் நவலோக்க மருத்துவமனை குழுமம் சவால்களை எதிர்கொள்ள முடிந்தமை குறிப்பிடத்தக்கது.




Mr. FriesQ தனது முதலாவது ஆண்டு நிறைவு விழாவை Arcade சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடியது. இந்த நாளை நினைவுகூருவதற்குப் பதிலாக "Mr. Fries Carnival" என்ற பெயரில் ஒரு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் சுமார் 1500க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் பங்கேற்றதுடன் இந்த நிகழ்வு மிக வெற்றிகரமாக இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியில் குழந்தைகளுக்கான Musical Chair, Games Stalls, DJ, Face Painting, Mehendi மற்றும் பலவெரு கலாச்சார நிகழ்வுகள் இடம்பெற்றனர்.

(படம்: ருஸைக் பாரூக்)

# திருகோணமலை கிளை கட்டடத்துக்கு பசுமைக் கட்டட விருதை வென்றது கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கியின் திருகோணமலைக் கிளைக்கு அண்மையில் பசுமைக் கட்டட விருது வழங்கும் விழாவில் தங்க விருது வழங்கப்பட்டுள்ளது. சுற்றாடலுக்கு இசைவான கட்டடத்தை கட்டி உள்ளமைக்காக இலங்கை பசுமைக் கட்டட சபை *Green Building Council of Sri Lanka (GBCSL)* இந்த விருதை வழங்கி உள்ளது.





கொமர்ஷல் வங்கியின் திருகோணமலை கிளை இலக்கம் 420 நீதிமன்ற வீதி திருகோணமலை என்ற முகவரிக்கு அண்மையில் மாற்றப்பட்டது. இந்தக் கட்டிடம் *GREENSL* தரப்படுத்தலுக்கு உட்பட்டதாகும். *GBCSL* இந்த தரப்படுத்தல் முறையை உருவாக்கி உள்ளது. இலங்கையின் நிலைமைகளுக்கு ஏற்ப உள்ளூர் தரத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த தரப்படுத்தல் முறை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடம் கூரையின் மேல் பரப்பில் சூரிய சக்தி வசதியைக் கொண்டுள்ளது. இந்தக் கட்டிடத்துக்கு தேவையான மின்சாரத்தின் பெரும் பகுதியை மின்சார மாணி முறைக்கு அப்பால் இங்கு தயாரிக்க முடியும். கூரைக்கு மேலால் மழை நீர் சேமிப்பு முறையும் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. நீர் கட்டுப்பாட்டு முறையும் இங்கு உள்ளது. கழிவு நீரை மீள் சுழற்சி செய்து தோட்டங்களுக்கு பாய்ச்சக் கூடிய வகையில் சொந்தமான நீர்ப்பாசன முறையும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வெப்பமேற்றல் கழகத்தோடு ஒப்பிடுகையில் 30 வீத சக்தி சேமிப்பையும் இந்தக் கட்டிடம் பதிவு செய்துள்ளது. இது குளிர்சாதன மற்றும் குளிரூட்டி பொறியியல் தரமுறையின் அடிப்படையிலானது. நீர்ப்பாசனத்துக்கும் தோட்ட வடிவமைப்புக்கும் நீரை வழங்கும் அதேவேளை மிகக் குறைவான அளவு நீரே இந்தப் பொறிமுறை மூலம் உள்வாங்கப்படுகின்றது.

பிரித்தானியா மற்றும் ஜக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில்

# இலங்கையின் பனை மர உற்பத்தி பொருட்கள் அறிமுகம் செய்யும் நிகழ்வு

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையின் பனை மர உற்பத்திப் பொருட்களை பிரித்தானியா, மற்றும் ஜக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் இலண்டனில் நடைபெற்றது. இவ் நிகழ்வினை இலங்கையின் பனை அபிவிருத்தி அதிகார சபை ஏற்பாடு செய்திருந்தது.

அண்மையில் நடாத்தப்பட்ட கண்காட்சியில் பிரான்சிலிருந்து 45.000 அமெரிக்க டொலர்களுக்கு நம் நாட்டுப் பனை உற்பத்திப் பொருட்களுக்கான பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையிலிருந்து ஏற்றுமதி வர்த்தகமும் கிடைக்கப் பெற்றுள்ளது என பெருந்தோட்ட அமைச்சர் ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.



வடக்கில் பெருந்தொகையான உற்பத்திகளை வெளிநாடுகளில் சந்தைப்படுத்துவதற்காக பெருந்தோட்ட அமைச்சர் டொக்டர் ரமேஸ் பத்திரனவின் நடவடிக்கையின் பேரில் நவம்பர் டிசம்பர் மாதங்களில் 3 வாரமாக இலண்டன் சந்தையில் இவ் உற்பத்திப் பொருட்கள் கன்காட்சிப்பத்தப்பட்டது, இதனால் இவ் உற்பத்திப் பொருட்களை கவர்ந்த அந் நாட்டு வர்த்தகர்கள் இப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு விரும்பம் தெரிவித்து கேள்வி கோரப்பட்டுள்ளது. இவ் உற்பததிகளை வெளிநாடுகளில் ஏற்றுமதி செய்து இலங்கைக்கு அந்நியச் செலவாணி மற்றும் வடக்கில் உள்ள பனை உற்பத்தியாளா'களுக்கு சந்தை வசதிகளை ஏற்படுத்துவதற்கும் சிறந்ததொரு வாய்பாகும்.

இவ் ஏற்பாடுகளை இலங்கை பனை அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பெருந்தோட்டம் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

MSMEகளின் நிதியறிவை மேம்படுத்த

# சிலாபத்தில் நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுக்கும் HNB Finance

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றான *HNB FINANCE PLC*, மைக்ரோ, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கான *(MSMEs)* ஆண்டின் இரண்டாவது நிதியறிவு செயலமர்வு நிகழ்ச்சித்திட்டம் அண்மையில் சிலாபத்தில் நடைபெற்றது.



சிலாபம் கொழும்பு வீதியிலுள்ள ஸ்ரீ விஜயராம விஹாரையில் இந்த செயலமர்வு இடம்பெற்றதுடன், *HNBF* இன் 100 வாடிக்கையாளர்கள் மாத்திரமே இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

இந்த செயலமர்வில் இணைந்த வணிகர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட மற்றும் வணிக கணக்குகளை பராமரிப்பது குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டதுடன் இதற்கு உதவியாக நிதியறிவு குறித்த சிறு புத்தகம் ஒன்றும் வழங்கப்பட்டது மேலும் *HNBF*இன் சிலாபம் கிளையின் ஊழியர்களும் எதிர்காலத்தில் பங்கேற்கவுள்ளவர்களுக்குமான வழிகாட்டல்களை வழங்குவதற்காக வருகை தந்திருந்தனர்.

*HNBF* சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதானி உதார குணசிங்க, *HNBF* பயிற்சிப் பிரிவின் பிரதானி அனுர உடவத்த மற்றும் *HNBF*இன் சிலாபம் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் ரசிக பிரேமலால் மற்றும் *HNBF* இன் சந்தைப்படுத்தல் மற்றும் பயிற்சி குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் கிளை ஊழியர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# PropertyGuru Asia Property Awards மாபெரும் நிகழ்வில் சிறந்த ரியல் எஸ்டேட் டெவலப்பர்கள், திட்டங்கள் கௌரவிப்பு

தென்கிழக்கு ஆசியாவின் முன்னணி சொத்து தொழில்நுட்ப நிறுவனமான *PropertyGuru Group (NYSE: PGRU)* ஆனது, *Kohler* இனால் வழங்கப்படுகின்றதும் உலகின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்களால் ஆதரிக்கப்படுகின்றதுமான 17ஆவது வருடாந்த *PropertyGuru Asia Property Awards* மாபெரும் இறுதி நிகழ்வில் ஆசியாவின் சிறந்த பிரதிநிதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பிராந்திய வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.

சீனாவைப் பிரதிநிதித்துவப் படுத்தி (ஹொங்கொங் மற்றும் மக்காவ்) *Best Developer* (ஆசியா) விருதை *New World Development Company Limited* பெற்றுக் கொண்டது. வடிவமைப்பு நடைமுறையில் *Lead8* உடன் இணைந்து, *11 SKIES* திட்டத்திற்காக *Best Mega Mixed Use Development* (ஆசியா) விருதையும் பெற்றது.




சீனாவைப் பிரதிநிதித்துவப் படுத்தி, *Shougang Park Urban Weaving District* திட்டத்திற்காக *Best Retail Architectural Design*(ஆசியா) விருதை *Lead8* வென்றது. *Benoy Limited* ஆனது, *CRL MixC Qianhai* திட்டத்திற்காக *Best Mixed Use Architectural Design* (ஆசியா) விருதை சீனாவை பிரதிநிதித்துவப்படுத்தி பெற்றது. *Aboitiz InfraCapital Economic Estates* திட்டத்திற்காக *Best Industrial Developer* (ஆசியா) பட்டம் மற்றும் *GlobalEstate Resorts, Inc. (GERI)* திட்டத்திற்காக *Best Lifestyle Developer* (ஆசியா) பட்டம் ஆகியவற்றை பெற்றதன் மூலம் ஏழு பிராந்திய வெற்றிகளை பிலிப்பைன்ஸ் பெற்றுக் கொண்டது. *Aboitiz InfraCapital Economic Estates* ஆனது *LIMA Estate* திட்டத்திற்காக *Best Industrial Development* (ஆசியா) மற்றும் *Best Green Development* (ஆசியா) ஆகிய விருதுகளையும் வென்றது.

இலங்கை தொழில்முனைவோருக்கு

# Tim Draper யிடமிருந்து தமக்கான தொடக்கத்தை பெற வாய்ப்பை வழங்கும் Hatch

*Hatch* ஆனது, *Draper Startup House* உடன் இணைந்து, *"Meet the Drapers"* எனும் உலகளாவிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை இலங்கையில் அறிமுகம் செய்கிறது. நீங்கள் தொழில்நுட்பத்தில் அடுத்த கட்ட பாரிய யோசனைகளுடன் பணியாற்றுபவர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாகும். 2023, ஜனவரி 18 இற்குள் உங்கள் *pitch decks* (உங்கள் வணிகத்திற்கான ஆரம்ப மூலதனத்தை திரட்டுவதற்கான விளக்கக்காட்சி) தகவலை *hello@meetthedrapers.com* இற்கு மின்னஞ்சல் செய்ய வேண்டும்.




இது, உலகளாவிய ரீதியில் மில்லியன் கணக்கான பார்வையாளர்களுக்கு முன்பாக, உள்ளூர் தொழில் முனைவோர் தமது தொடக்க வணிகத்தை காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பை பெறுவதோடு மட்டுமல்லாமல், வாழ்நாளில் ஒருமுறையாவது அடையக் கூடிய, தமது வணிகத்தை சிலிக்கன் வெலி முதலீட்டாளரான *Tim Draper* யிற்கு முன்வைப்பதற்கும், 1 மில்லியன் டொலர் முதலீட்டை வெல்வதற்குமான வாய்ப்பையும் பெறமுடியும்.

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில், *Draper Startup House* நிறுவுனர் விக்ரம் பாரதி, *Hatch* இன் உருவாக்குனர்களான ஜீவன் ஞானம் மற்றும் பிருந்தா செல்வதுரை ஞானம் ஆகியோரைச் சந்தித்தார். இதன்போது, பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ள தேசத்தை, உண்மையான தொடக்க வணிகங்கள் நிறைந்த தேசமாக மாறக் கூடிய இலங்கையின் மகத்தான ஆற்றல் குறித்து அவர் நம்பிக்கை தெரிவித்தார். வளர்ந்து வரும் தொழில்முனைவோர் கூட்டமொன்றின் மூலம் நாட்டின் கஷ்டங்களை சமாளிப்பதற்கான மிகப்பெரிய வாய்ப்பு ஏற்படுத்தப்படுமென, அவர் இதன்போது கருத்து வெளியிட்டார்.

# முதல் தொடர் வெற்றி எதிர்பார்ப்புடன் இலங்கை டி20 அணி இன்று களத்தில்

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையே தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் இறுதி டி20 போட்டி இன்று (07) ராஜ்கோட்டில் நடைபெறவுள்ளது.

முதல் டி20 போட்டியை இந்தியா வென்ற நிலையில் இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அபாரமாக செயற்பட்டு தொடரை சமன் செய்தது. இதனால் இந்திய மண்ணில் முதல் முறை இரு தரப்பு டி20 தொடர் ஒன்றை கைப்பற்றும் வாய்ப்பு இலங்கைக்கு கிட்டியுள்ளது.

அணித்தலைவர் தசுன் ஷானக்கவின் அபார துடுப்பாட்டம் மற்றும் கடைசி நேர பந்துவீச்சே கடந்த போட்டியில் இலங்கை வெற்றிக்கு முழுக் காரணமாக இருந்தது.

எனவே இன்று அவரது ஆட்டம் தீர்க்கமானதாக இருக்கும்.



எனினும் சரித் அசலங்க மற்றும் குசல் மெண்டிஸ் இருவரும் சோபித்ததோடு இலங்கை அணியின் பந்துவீச்சு வலுவானதாக உள்ளது.

எனினும் பானுக்க ராஜபக்ஷ சோபிக்கத் தவறி இருப்பதோடு தனஞ்சய டி சில்வாவின் ஆட்டம் முழுமையாக எடுபடவில்லை.

எனவே இன்றைய போட்டியில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசையில் மாற்றம் நிகழ வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக காயத்தில் இருந்து மீண்டு வந்திருக்கும் அவிஷ்க பெர்னாண்டோ களமிறக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹார்திக் பாண்டியா தலைமையிலான இளம் இந்திய அணி பூனேவில் நடந்த இரண்டாவது டி20இல் சோபிக்கத் தவறிய நிலையில் இன்றைய போட்டிக்கு அந்த அணியில் மாற்றங்கள் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ராஜ்கொட் சுரஷ்ட்ரா கிரிக்கெட் சங்க அரங்கில் இலங்கை அணி இதற்கு முன்னர் ஆடியதில்லை என்பதோடு இந்தியா இதுவரை நான்கு போட்டிகளில் ஆடி மூன்றில் வென்றுள்ளது.

துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமான இந்த மைதானத்தில் அணிகள் அதிக ஓட்டங்களை குவித்துள்ளன.

எனினும் அண்மையில் நடந்த இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான போட்டியில் குறைந்த ஓட்டங்களே பதிவாகின.

நாணய சுழற்சி முடிவு எந்த அளவு தாக்கம் செலுத்தும் என்று உறுதியாகக் கூற முடியாது.

இங்கு இடம்பெற்ற நான்கு போட்டிகளில் முதலில் துடுப்பெடுத்தாடிய அணி இரண்டு போட்டிகளிலும் பதிலெடுத்தாடிய அணி இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டியுள்ளன.

இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இன்று மாலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

# இளையோர் டி20 உலகக் கிண்ணம்: இலங்கை மகளிர் குழாம் அறிவிப்பு



இம்மாதம் பிற்பகுதியில் ஆரம்பமாகவுள்ள 19 வயதுக்கு உட்பட்ட முதலாவது பெண்கள் டி20 உலகக் கிண்ண போட்டிக்கான இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய அணியில் ஆடும் விஷ்மி குணரத்ன அணித் தலைவியாக அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த நவம்பரில் இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டுஆடியநாற்தரப்பு தொடரின் அணியில் இருந்து ஒரு மாற்றமே செய்யப்பட்டுள்ளது. இதில் சஞ்சன காவிந்திக்கு பதில் தஹமி செனெத்மா அழைக்கப்பட்டுள்ளார்.

19 வயதுக்கு உட்பட ஐ.சி.சி உலகக் கிண்ண தொடர் தென்னாபிரிக்காவில் வரும் ஜனவரி 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதில் பதினாறு அணிகள் நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஆடவுள்ளன.

இலங்கை இளையோர் அணி ஏ குழுவில் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் மற்றும் அமெரிக்காவுடன் இடம்பெற்றுள்ளது.

இதன்படி வரும் ஜனவரி 14ஆம் திகதி அமெரிக்காவை எதிர்கொள்ளும் இலங்கை இளையோர் அணி தொடர்ந்து ஜனவரி 16 ஆம் திகதி பங்களாதேஷ் அணியுடனும் ஜனவரி 18 ஆம் திகதி அவுஸ்திரேலிய அணியுடனும் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. அனைத்துப் போட்டிகளும் விலோமூர் பர்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை குழாம்: விஷ்மி குணரத்ன (தலைவி), தேவ்மி விஹான்கே, உமாயா ரத்னாயக்க, ரஷ்மி நெத்ரன்ஜலி, ரஷ்மிக்க செவ்வன்தி, மனுதி நாணயக்கார, சுமுது நிசன்சலா, பமோத சைனி, விதுஷிகா பெரேரா, துலங்க திசாநாயக்க, ரிஷ்மி சஞ்சனா, நெத்மி செனரத்ன, ஹரினி பெரேரா, விஹாரா செவ்வன்தி, டஹ்மி செனெத்மா.

# ஸ்பாடன்ஸ் வெற்றி



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டு கழகத்துக்கு எதிரான சிநேகபூர்வ கால்பந்து போட்டியில் சம்மாந்துறை ஸ்பாடன்ஸ் விளையாட்டுக் கழகம் 2–0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆதிக்கம் செலுத்திய ஸ்பாடன்ஸ் அணிக்காக நசீத் மற்றும் ஐனுஸ்கான் ஆகியோர் கோல் பெற்றனர்.

# "நோபோல் வீசுவது குற்றம்"



நோபோல் வீசுவது குற்றம் என்று இந்திய டி20 அணித் தலைவர் ஹார்திக் பாண்டியா தெரிவித்துள்ளார்.

பூனோவில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான இரண்டாது டி20 போட்டியில் இந்திய அணி 16 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது. இதில் இந்திய அணி மொத்தம் ஏழு நோபோல்களை வீசியதோடு வேகப் பந்து வீச்சாளர் ஆர்ஷ்தீப் சிங் மாத்திரம் ஐந்து நோபோல்களை வீசினார்.

இந்நிலையில் போட்டிக்குப் பின்னர் கருத்துத் தெரிவித்த பாண்டியா கூறியதாவது,

“பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தின் போது பவர் பிளேயில் நாங்கள் சிறப்பாக செயல்படவில்லை. இது எங்களை காயப்படுத்தி விட்டது. நாங்கள் சில அடிப்படை தவறுகளை செய்தோம்.

சர்வதேச அளவில் விளையாடும் நாங்கள் அதை செய்யக்கூடாது. அது என்னவென்று அனைவருக்கும் தெரியும். நாம் எதை கட்டுப்படுத்த முடியும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். துடுப்பாட்டத்தில் அன்று நல்ல நாளாக இருக்கலாம். கெட்ட நாளாகவும் அமையலாம். ஆனால் அடிப்படை விடயங்களில் இருந்து விலகிச் செல்லக்கூடாது.

ஆர்ஷ்தீப் சிங்கின் சூழ்நிலை மிகவும் கடினமாக இருந்தது. அவரை குறை கூறவோ அல்லது கடுமையாக நடந்து கொள்ளவோ முடியாது. ஆனால் எந்த வடிவத்திலும் நோபால் வீசியது குற்றம் என்பது எங்களுக்குத் தெரியும்.

ராகுல் திரிபாதி 3ஆவது வீரராக விளையாடுவது வழக்கம். அணியில் யாராவது புதுமுகமாக வந்தால் அவர்களுக்கு வாய்ப்பு வழங்க விரும்புகிறோம். இதனால் தான் ராகுல் திரிபாதி 3ஆவது வீரராக களம் இறக்கப்பட்டார்” என்று அவர் குறிப்பிட்டார்.

# பாக். ஒருநாள் குழாத்தில் மூன்று புதுமுக வீரர்கள்

நியூசிலாந்து அணிக்கு எதிராக நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான பாகிஸ்தான் குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இடைக்கால தேர்வுக்குழு தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சஹீட் அப்ரிடி, நியூசிலாந்து தொடருக்கான குழாத்தை பெயரிட்டுள்ளார்.

அதன்படி இரண்டு புதுமுக துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் ஒரு புதுமுக சகலதுறை வீரர் என மூன்று புதுமுக வீரர்கள் பாகிஸ்தான் குழாத்தில் இடம்பெற்றுள்ளனர். துடுப்பாட்ட வீரர்களான கம்ரான் குலாம், டையாப் தாஹீர் ஆகியோருடன், சுழல் பந்துவீச்சு சகலதுறை வீரர் உசாமா மிர் அணியில் முதன்முறையாக இணைக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் இறுதியாக நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் கிண்ண லிஸ்ட் ஏ போட்டித் தொடரில் இந்த மூவரும் மிகச்சிறந்த பிரகாசிப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர். இதில், டையாப் தாஹீர் இறுதிப்போட்டியில் அரைச்சதம் கடந்து ஆட்டநாயகனகவும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

பாகிஸ்தான் அணி தற்போது நியூசிலாந்து அணிக்கு எதிராக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் நிலையில், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் கராச்சியில் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பாகிஸ்தான் ஒருநாள் குழாம்: பாபர் அசாம் (தலைவர்), பகார் ஷமான், ஹரிஸ் ரவூப், ஹரிஸ் சொஹைல், இமாம் உல் ஹக், கம்ரான் குலாம், மொஹமட் ஹஸ்னைன், மொஹமட் நவாஸ், மொஹமட் ரிஸ்வான், மொஹமட் வசீம் ஜூனியர், நசீம் ஷா, சல்மான் அலி ஆகா, சஹானவாஸ் தஹானி, ஷான் மசூட், டயாப் தாஹீர், உசமா மிர்.



# குறிப்புகள்



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் இலங்கை அணி 16 ஓட்டங்களால் வெற்றியீட்டி தொடரை 1–1 என சமநிலை செய்தது. இந்தப் போட்டியில் இடம்பெற்ற சாதனைகள் வருமாறு,

- இந்த வெற்றியுடன் இலங்கை அணி இந்திய மண்ணில் இந்தியாவுக்கு எதிராக தொடர்ச்சியாக 12 போட்டிகளில் சந்தித்த தோல்விக்கு முடிவு கட்டியுள்ளது. இதற்கு முன்னர் 2016 பெப்ரவரி 9ஆம் திகதி இதே பூனேவில் நடந்த போட்டியிலேயே இந்திய அணியை வீழ்த்தி இருந்தது. அதன்படி கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளின் பின்னரே இலங்கை அணி இந்தியாவை அதன் சொந்த மண்ணில் டி20 ஒன்றில் வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்க 22 பந்துகளில் 2 பௌண்டரிகள் மற்றும் 6 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களைப் பெற்றார். இதன்போது அவர் 20 பந்துகளில் அரைச்சதம் பெற்று டி20 போட்டிகளில் அதிவேக அரைச்சதம் பெற்ற இலங்கை வீரராக சாதனை படைத்தார். முன்னர் மஹேல ஜயவர்தன மற்றும் குமார் சங்கக்கார இருவரும் தலா 21 பந்துகளில் அரைச் சதம் பெற்றதே சாதனையாக இருந்தது.
- இந்தியாவுக்கு எதிராக தசுன் ஷானக்கவின் அபார ஆட்டம் தொடர்கிறது. அவர் இந்தியாவுக்கு எதிராக கடைசியாக ஆடிய ஐந்து டி20 போட்டிகளில் முறையே ஆட்டமிழக்காது 47 (19), ஆட்டமிழக்காது 74 (38), ஆட்டமிழக்காது 33 (18), 45 (27) மற்றும் ஆட்டமிழக்காது 56 (22) ஓட்டங்களை பெற்றுள்ளார். டி20 சர்வதேச போட்டிகளில் இந்தியாவுக்கு எதிராக 400 ஓட்டங்களை பெற்ற முதல் இலங்கை வீரராகவும் அவர் பதிவாகியுள்ளார்.
- முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 206 ஓட்டங்களை பெற்றது. அதாவது இலங்கை அணி 2010 ஜனவரி மாதத்தின் பின் இந்தியாவுக்கு எதிராக 200 ஓட்டங்களுக்கு மேல் பெறுவது இது முதல் முறையாகும். அதேபோன்று 69 போட்டிகளின் பின் அதாவது 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் டி20யில் 200 ஓட்டங்களுக்கு மேல் இலங்கை பெறுவதும் இது முதல் முறை.
- இலங்கை அணி தனது இன்னிங்ஸில் மொத்தம் 14 சிக்ஸர்களை விளாசியது. தசுன் ஷானக்க ஆறு சிக்ஸர்களை பெற்றதோடு குசல் மெண்டிஸ் மற்றும் சரித் அசலங்க தலா நான்கு சிக்ஸர்களை விளாசினர். இது டி20 இன்னிங்ஸ் ஒன்றில் இலங்கை அணி பெற்ற அதிக சிக்ஸர்களாக சாதனை படைத்தது.
- இந்தப் போட்டியில் இந்தியா மொத்தமாக ஏழு நோபோல்களை வீசியது. அதாவது டி20 சர்வதேச போட்டிகளில் அணி ஒன்று போட்ட அதிக நோபோல்கள் இது தான். இதற்கு முன்னர் 4 நோபோல்கள் வீசிய அயர்லாந்தே இந்த சாதனைக்கு சொந்தம் கொண்டாடியது. அதுவும் இந்த ஏழு நோபோல்களில் ஐந்து ஆர்ஷ்தீப் சிங் வீசியது. அதிலும் அவர் தொடர்ச்சியாக மூன்று நோபோல்களை வீசினார்.
- சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க வீசிய 14ஆவது ஓவரில் அவர் மொத்தம் 26 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். டி20 சர்வதேச போட்டிகளில் அவர் ஒரு ஓவரில் விட்டுக்கொடுத்த அதிக ஓட்டங்கள் இதுவாகும். இதற்கு முன்னர் அவர் 2019இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 22 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 7ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.